Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Dream Solutions Pvt Ltd
The Solutions People
நிலா.com வெளியீடுகள்
The King Of Multimedia

சுயகற்றலுக்கான தமிழில் பல்லூடக குறுவட்டுக்கள்

Ms-Word-xp, Pagemaker, Java
Ms-Excel-xp, PhotoShop, TCP/IP
PowerPoint-xp, CorelDraw, SQL
Ms-Access-xp, Macromedia Flash, Thirukkural
Ms-FrontPage-xp, Computer Hardware, Thamizha
Ms-Visual Basic, 3D-Studio Max., இன்னும் பல...

275, யாழ்வீதி, மானிப்பாய். தொ.இல. 0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 சித்திரை - 05 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற.அவ்வல்08 (18.04.2005) திங்கட்கிழமை இதழ்:201

# முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கனடாவுக்குள் நுழைய தகுதியற்றவர்!

## இலங்கை அரசின் தூதுவர் நியமனத்தை கனடிய அரசாங்கம் நிராகரிப்பு!

(கொழும்பு)

கனடாவுக்கான உயர் ஸ்தானிகராக முன்மொழியப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் சந்திரானந்த டி சில்வா மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத் தப்பட்டிருப்பதால்,

அவரது நியமனத்தை அங்கீகரிக்க கனடிய அரசாங்கம் மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது

முன்னாள் தேர்தல் ஆணையாளரும் பாதுகாப்புச் செயலாளருமான சந்திரானந்த டி சில்வாவை கனடாவுக்கான உயர் ஸ்தானிகராக நியமிக்க அரசாங்கம் முன்மொழிந்திருந்தது.

ஆனால் இவரது இந்த நியமனத்தை நிராகரிப்பதாக கனடா அரசாங்கம் கடந்த வாரம் இலங்கையின் வெளியுறவு அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலராக பதவிவகித்த காலத்தில் சந்திரானந்த டி சில்வா மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுக்கள் உள்ள நிலையில் தமது நாட்டின் பயங்கரவாதத் தடைச் சட்டம் 2000 இன் படி அவர் தனது நாட்டுக்குள் நுழையத் தகுதியற்றவர் என கனடா அறிவித்துள்ளது.

கனடாவின் இந்த முடிவானது இலங்கை அரசாங்கத்துக்கு புதியதொரு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கனடாவின் இந்த முடிவுக்கு ரொறன்ரோ நகரில் வாழும் தமிழர்களே தூண்டுதலாக இருந்திருக்க வேண்டுமென கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை சமாதான முயற்சிகளில் கனடிய அரசாங்கம் அதிகளவான பங்களிப்பைச் செய்வது குறித்து ஆராய்ந்துவரும் நிலையிலேயே கனடா சந்திரானந்த டி சில்வாவுக்கு சிவப்புக்கொடி காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலர் இன்று கொழும்பு வருகிறார்!

(கொழும்பு)

தெற்காசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அமெரிக்க இராஜாங்க பிரதிச்செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா - மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று கொழும்பு வரவுள்ளார்.

இவர் இலங்கையில் தங்கியிருக்கும்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரச தரப்பு பிரமுகர்கள் பலரையும் சந்தித்துக் கலந்துரையாட இருப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ள கிறிஸ்டினா றொக்கா - சுனாமியால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை நேரடியாகப் பார்வையிடவுள்ளார். நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மையும் இவர் கொழும்பில் சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் சமாதான (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முன்முயற்சிகளில் விரைந்து முடிவெடுக்கப்படும்!

### புத்தளத்தில் எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தமிழ், சிங்களம், முஸ்லிம் ஆகிய இனங்கள் நெருக்கடியான நிலையில் உள்ளன. விசேடமாக வடபகுதி மக்கள் பெருமளவு சிரமங்களை அனுபவித்துள்ளனர். எனவே, இந்தப் பிரச்சினை தொடர் பாக முடிந்தளவு விரைவில் முடிவுகளை எடுப்போம் என்பதே நோர்வே அரசாங்கத்தினால் வழங்கக்கூடிய உறுதிமொழியென, நோர்வேயின் விசேட சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

நேற்று புத்தளம் பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த விசேட (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் பறந்த விமானம்:

## பொதுக்கட்டமைப்பை அரசு

## கிளாலியில் பறந்த விமானம்:

# முன்னுக்குப் பின்னர் முரணாக செய்தி வெளியிட்ட படைத்தரப்பு!

(கொழும்பு)

கிளாலி கடல்நிரேரிப் பகுதியில் விடுதலைப் புலிகளது எனச் சந்தேகிக்கப்படும் விமானம் ஒன்று - பறந்ததாக இராணுவத் தலைமையகம் செய்தி வெளியிட்டிருந்தபோதும் -

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க - இதை உறுதிப் படுத்த முடியாதெனத் தெரிவித்துள்ளார்.

கிளாலி கடல்நிரேரிக்கு மேலாக புலிகளின் விமானம் ஒன்று பறந்ததாக நேற்றைய பத்திரிகைகளில் வெளியான செய்தி குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க கருத்துத் தெரிவிக்கையில் -

புலிகளின் பகுதியில் விமானம் ஒன்று பறந்ததான செய்தியை உறுதிப் படுத்த முடியாது. இது குறித்து விசாரணை ஒன்று நடத்தப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளிடம் விமானம் இருப்பது குறித்து செய்திகள் வெளிவந்தபோதும் - யாழ்.குடாக் கடலுக்கு மேலாகப் பறந்தது குறித்துக் கூறப்படும் செய்தியை உறுதிப்படுத்த முடியாது .

விடுதலைப் புலிகள் இயக்கம், தமது பலம் குறித்து போலிப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

தம்மிடம் விமான ஓடுபாதை, விமானம், கப்பல் என்பன இருப்பதாக அண்மைக்காலமாக ஊடகங்கள் மூலம் அவர்கள் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 1300 பேருக்கு வங்கிகளில் ஜூன் மாதம் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 1300 பேருக்கு எதிர்வரும் ஜூன் மாதம் முதற் கட்டமாக வேலை வாய்ப்பு வழங்கப் போவதாக பிரதி நிதியமைச் சர்றஞ்சித் சியம்பலா பிட்டிய தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்த 30 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தில் முதற் கட்டமாகவே 1300 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய 750 பேருக்கு மக்கள் வங்கியிலும், இலங்கை வங்கியில் 300 பேருக்கும், தேசிய சேமிப்பு வங்கியில் 250 பேருக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



அரசாங்கத்தின்ர ஆட்டம் இனியும் பலிக்காது பாருங்கோ...!

# பொதுக்கட்டமைப்பை அரசு நிராகரித்துவிடக் கூடாது!

## கலாநிதி தயா ஜயதிலக கூறுகிறார்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக அடிப்படை யில்தான் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்த விடுதலைப் புலிகள், ஒருங்கிணைந்த பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளமை சிறப்பானதொரு விடயம் என்று, கொழும்பு பல்கலைக் கழக அரச அறிவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி தயா ஜயதிலக தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

பொதுக்கட்டமைப்பை நாம் நிரா கரிக்கக்கூடாது. இந்த நிலைக்கு புலிகளை வரவழைத்தது எமக்கு பாரிய வெற்றி.

எனவே, இதன்மூலம் இலங்கையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரிய அழிவுகளைத் தடுக்க முடியும். இருப்பினும் இதன் உள்ளடக்கம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்புக் குறித்து விரைவில் சந்திரிகா முடிவு!

(கொழும்பு)

சுனாமி அனர்த்த நிவாரண நடவடிக்கைகளை வடக்கு - கிழக்கில் முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குதல், முக்கிய அரசதுறை நிறுவனங்களை தனியார் மயப்படுத் துதல் உள்ளிட்ட - சர்ச்சைகளுக்குள்ளாகியிருக்கும் - தேசிய முக்கியத் துவம்வாய்ந்த விடயங்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா விரைவில் தீர்க்கமான முடிவு ஒன்றை அறிவிக்க விருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பொதுக் கட்டமைப்பு உருவாக்கம், தனியார் மயப்படுத்தல் ஆகிய விடயங்களில் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப் பைக் காட்டி வருகின்றபோதும் - ஜனாதிபதி சந்திரிகா இந்த விடயங்களில் தீர்க்கமான முடிவை எடுக்கப் போவதாகவும் - அவர்களது எதிர்ப் பைச் சவாலாக எடுத்துச் செயற்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# கோப்பாய் கோட்ட மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

கோப்பாய் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு -

### 11 வயது ஆண்கள்

| | | |
|---|---|---|
| 75 மீற்றர் | 1 | வீ.மதியுகன் |
| | 2 | ஜே.நிவேதன் |
| | 3 | ஜே.மயூரன் |
| 100 மீற்றர் | 1 | ஜே.மயூரன் |
| | 2 | வி.மதியுகன் |
| | 3 | எஸ்.தர்சிலன் |
| நீளம்பாய்தல் | 1 | ஜீ.விதுசன் |
| | 2 | யூ.சொரூபன் |
| | 3 | ஜே.நிவேதன் |
| | 3 | வீ.பிரியதர்சன் |
| உயரம் பாய்தல் | 1 | ஜே.மயூரன் |
| | 2 | எஸ்.திருசாந் |
| | 3 | வை.சுதர்சன் |

### 13 வயது ஆண்கள்

| | | |
|---|---|---|
| 100 மீற்றர் | 1 | வை.பிரதாபன் |
| | 2 | என்.தனுசன் |
| | 3 | வை.ஜகிலன் |
| 200 மீற்றர் | 1 | என்.தனுசன் |
| | 2 | கே.நிரோசன் |
| | 3 | பி.கஜீபன் |
| நீளம் பாய்தல் | 1 | எம்.தர்சன் |
| | 2 | ரீ.தினகஜீவன் |
| | 3 | ரீ.கஜீவன் |
| உயரம் பாய்தல் | 1 | என்.நிரோஜன் |
| | 2 | ஆர்.துவாரகன் |
| | 3 | எம்.தர்சன் |

### 15 வயது ஆண்கள்

| | | |
|---|---|---|
| 100 மீற்றர் | 1 | என்.கோல்டன்டாஸ் |
| | 2 | ரீ.டினேஸ் |
| | 3 | எஸ்.கிசோத் |
| 200 மீற்றர் | 1 | ஆர்.கிருபாகரன் |
| | 2 | பி.நிரோசன் |
| | 3 | எஸ்.கிசோத் |
| 40 மீற்றர் | 1 | ரீ.நிரோஜன் |
| | 2 | கோல்டன்டாஸ் |
| | 3 | ரி.டினேஸ் |
| நீளம் பாய்தல் | 1 | எஸ்.கிசோத் |
| | 2 | ஜே.சுஜீவன் |
| | 3 | ஆர்.சஞ்சீவன் |
| உயரம் பாய்தல் | 1 | ரி.சியாம்குமார் |
| | 2 | ஆர்.ஜெசிதரன் |
| | 3 | ஜி.தவசீலன் |
| குண்டெறிதல் | 1 | பி.அங்குசன் |
| | 2 | என்.கோல்டன்தாஸ் |
| | 3 | ரி.சயந்தன் |
| தட்டெறிதல் | 1 | பி.துவாரகன் |
| | 2 | பி.சர்மிளன் |
| | 3 | பி.அங்குசன் |
| ஈட்டியெறிதல் | 1 | பி.அங்குசன் |
| | 2 | என்.நிதர்சன் |
| | 3 | கே.ஜெனன் |

### 17 வயது ஆண்கள்

| | | |
|---|---|---|
| 100 மீற்றர் | 1 | எஸ்.ஸ்ரீராகவன் |
| | 2 | எஸ்.டிலின் |
| | 3 | ஜே.நெல்சன் |
| 200 மீற்றர் | 1 | எஸ்.ஸ்ரீராகவன் |
| | 2 | ஜே.நெல்சன் |
| | 3 | பி.காண்டிபன் |
| 40 மீற்றர் | 1 | எம்.மதனரூபன் |
| | 2 | கே.துவாரகன் |
| | 3 | ரி.பிரபாகரன் |
| 800 மீற்றர் | 1 | எம்.மதனரூபன் |
| | 2 | ரி.சுகிர்தன் |
| | 3 | ரி.பிரபாகரன் |
| 1500 மீற்றர் | 1 | ரி.தனிஸ் |
| | 2 | கே.டினோசன் |
| | 3 | ரி.பிரபாகரன் |
| நீளம் பாய்தல் | 1 | ஆர்.நிசாந்தன் |
| | 2 | கே.டினோசன் |
| | 3 | ரீ.பார்த்தீபன் |
| முப்பாச்சல் | 1 | எஸ்.பிரசாந்தன் |
| | 2 | ஆர்.டயன் |
| | 3 | ரி.நீயூட்டன் |
| உயரம் பாய்தல் | 1 | ஆர்.டயன் |
| | 2 | வி.நிதர்சன் |
| | 3 | பி.அயந்தன் |
| குண்டெறிதல் | 1 | கே.நிதீபன் |
| | 2 | ரி.சுபீட்சன் |
| | 3 | பி.நிவேதன் |
| தட்டெறிதல் | 1 | ரி.சுபீட்சன் |
| | 2 | கே.நிதீபன் |
| | 3 | பி.தர்சன் |
| ஈட்டியெறிதல் | 1 | எஸ்.கவீந்திரன் |
| | 2 | கே.நிதீபன் |
| | 3 | ஆர்.பார்த்தீபன் |

### 19 வயது ஆண்கள்

| | | |
|---|---|---|
| 100 மீற்றர் | 1 | ரீ.கோமரோ |
| | 2 | எஸ்.சுரேஸ் |
| | 3 | வி.ஜனுஸ்காந் |
| 200 மீற்றர் | 1 | கே.சபேசன் |
| | 2 | வி.தமிழ்ச்செல்வன் |
| | 3 | எம்.மயூரன் |
| 40 மீற்றர் | 1 | வி.மதீசன் |
| | 2 | கே.சபேசன் |
| | 3 | எஸ்.அனிஸ்டன் றொபேட் |
| 800 மீற்றர் | 1 | ரி.நகுலேஸ்வரன் |
| | 2 | எஸ்.கோகுலகிருஷ்ணன் |
| | 3 | எஸ்.அனிஸ்டன் றொபேட் |
| 1500 மீற்றர் | 1 | ரி.நகுலேஸ்வரன் |
| | 2 | வி.ஜெனடித் மென்டிஸ் |
| | 3 | எம்.மயூரன் |
| நீளம் பாய்தல் | 1 | ரி.லட்சியசீலன் |
| | 2 | எஸ்.கோகுலகிருஷ்ணன் |
| | 3 | வை.தினேஸ் |
| உயரம் பாய்தல் | 1 | ரி.லட்சியசீலன் |
| | 2 | கே.சபேசன் |
| | 3 | வி.தனுஸ்காந் |
| முப்பாய்ச்சல் | 1 | எஸ்.கோகுலகிருஷ்ணன் |
| | 2 | ஜெ.ஜோன்மயூரன் |
| | 3 | ஆர்.அஜந்தன் |

(தொடரும்...)

## சிறப்புற நடைபெற்ற நூல் அறிமுக விழா!

(யாழ்ப்பாணம்)

மூன்றாவது மனிதன் வெளியீடான இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியப் படைப்பு - படைப்பாளர்கள் பற்றிய குறிப்புக்கள் நூல் அறிமுக விழா நேற்று மாலை 3.30 மணியளவில் மூத்த விமர்சகர் ஏ.ஜே.கனகரட்ணா தலைமையில் யாழ்.பிரெஞ்சு நட்புறவுக்கழகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து வரவேற்புரையை யாழ். பிரெஞ்சு நட்புறவு கழக இயக்குனர் கலாநிதி ஜேராட் ரொபு வொன் நிகழ்த்தினார்.

நூல் நோக்கை கவிஞர் சோ.பத்மநாதன், சட்டத்தரணி, பொன் பூலோகசிங்கம், ஊடகவியலாளர் ராதேயன் ஆகியோர் நிகழ்த்தினர். நூலின் ஆசிரியர் சாந்தனின் உரையைத் தொடர்ந்து நன்றியுரையை யாழ்.பிரெஞ்சு நட்புறவு கழக பொருளாளர் இ.றமணன் நிகழ்த்தினார்.



நிகழ்வில் ஏ.ஜே.கனகரட்ணா உரைநிகழ்த்துகிறார்.





நிகழ்வில் கலந்துகொண்டோர்.

## பொதுமண்டபம் அமைப்பு

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரம்பொன் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் பொதுமண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை கடந்த வெள்ளிக்கிழமை ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் க.சிறிமோகனன் நாட்டிவைத்தார்.

இந்தப் பொதுமண்டபம் அமைப்பதற்கு நிகொட் நிறுவனம் 7 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த மண்டபத்துக்கான வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (44)

## மோட்டார் சைக்கிள்கள் மோதி இருவர் படுகாயமடைந்தனர்!

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 10.00 மணியளவில் நாவற்குழி ரயில்வே கடவைக்கு அருகாமையில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்தவரான நாவற்குழியைச் சேர்ந்த தம்பிஐயா (வயது 53) காலில் காயமடைந்த நிலையிலும் மற்றைய மோட்டார் சைக்கிளில் வந்தவரான மறவன்புலோவைச் சேர்ந்த ஜெயகாந்தன் தலையில் காயமடைந்த நிலையிலும் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கிராமிய சமுர்த்திச் செயலணியால் ஊர்காவற்றுறையில் பொதுச்சந்தை

(ஊர்காவற்துறை)

சமுர்த்தி அதிகாரசபையின் சந்தைப்படுத்தல் பிரிவின் நிதி உதவியுடன் ஊர்காவற்துறையில் பொதுச் சந்தைஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

ஊர்காவற்துறைப் பிரதேசத்தில் உள்ள மெலிஞ்சி முனைக் கிராமத்திலேயே இந்தச் சந்தை அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தச் சந்தை அமைப்பதற்கு சமுர்த்தி அதிகார சபை ஒரு இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது.

மெலிஞ்சிமுனை கிராமிய சமுர்த்தி செயலணி இந்தச் சந்தையை அமைத்து வருகின்றது. (44)

## தடுப்பு அணை அமைப்பு

நாரந்தனை தெற்கு கிராமத்தில் ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் உதவியுடன் நீர்த்தடுப்பனை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. மழைகாலங்களில் கடல் நீர் கிராமத்தினுள் உட்புகுவதால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்டு மக்கள் பங்களிப்புடன் மேற்படி அணை அமைக்கப்பட்டு வருகிறது. (44)

## சுனாமி முத்திரை கொடுப்பனவு சமுர்த்தி வங்கிகள் ஊடாக!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சுனாமி முத்திரைக்கான பணக்கொடுப்பனவினை சமுர்த்தி வங்கிகளினூடாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுனாமி முத்திரைப் புள்ளிக்குரிய 200 ரூபா பணம் சமுர்த்தி வங்கிகளினூடாக வழங்கப்படவுள்ளன.

முன்னர் இந்தப் பெறுமதிக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் விரும்பிய பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. இந்த நடைமுறை கடந்த மார்ச் மாதத்திற்குரிய புள்ளிகள் தொடக்கம் பணமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் சமுர்த்தி வங்கிகளில் கணக்குகளை ஆரம்பித்து வருகின்றனர். (44)

ராஜா

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

கமலஹாசன்,

மனிசா கொய்ராலா

நடித்த

மும்பை xபிரஸ்

(சி.3980)

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

சிறுவிளம்பரம்

வீடு வாடகைக்கு

மாநகர எல்லைக்குள் வீடு வாடகைக்கு உண்டு. அரசசார்பற்ற பொது நிறுவனங்கள் விரும்பத்தக்கது. தொடர்பு :-T.P - 222 5343. (1133)









வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம்

## மணல் விநியோக அறிவித்தல்

அன்னை பூபதி நினைவு தினத்தை முன்னிட்டு 19.04.2005 செவ்வாய்க்கிழமை மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. செவ்வாய்க்கிழமை (19.04..2005 ஆம் திகதி) குறிப்பிட்டவர்களுக்கான மணல் விநியோகம் 18.04.2005 இன்று திங்கட்கிழமையும், 20.4.2005 புதன்கிழமையும் நடைபெறும். பொருத்தமான ஒரு திகதியில் மணலைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

மணல் விநியோகப் பகுதி
உபயகதிர்காமம் நிர்வாகம்.

# புலிகளுக்கு எதிரான கூட்டணி; உருவாக்கும் முயற்சியில் 'றோ'!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான அரசியல் மற்றும் இராணுவ செயற்பாடுகளை மேற்கொள்ள புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் இந்திய புலனாய்வுப் பிரிவான றோ ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கென ஆனந்தசங்கரி தலைமையில் அரசியல் நடவடிக்கைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், இந்தக் குழுவினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொள்வார்கள் என்றும், இவர்களது பிரசாரங்களுக்கு பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் வானொலி ஒன்றும் சில இணையத் தளங்களும் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவின் ஆதரவாளர்கள், இந்தியாவில் தளம் அமைத்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் வரதர் அணியின் உறுப்பினர்கள் மற்றும் ஈ.என்.டி.எல்.எப் உறுப்பினர்களை உள்ளடக்கிய இராணுவ பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மீது தாக்குதல்களை நடத்துவது மற்றும் பதற்ற சூழல் ஒன்றைத் தோற்றுவிப்பது போன்ற நடவடிக்கைகளில் இந்தக் குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இந்தக் குழுவினருக்கு வழங்கப்பட்ட பெருமளவு நிதி தொடர்பாக முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் இதனையடுத்து எழுந்த முறுகல் நிலையே பொலனறுவவில் இடம்பெற்ற தாக்குதல்களுக்குக் காரணம் என்றும் தெரியவருகின்றது.

இதேவேளை, ஈ.பி.டி.பியினருடன் கொண்டிருந்த உறவில் குறிப்பிடத்தக்க பயன் எதுவும் இல்லை என்பதால், ஈ.பி.டி.பியினரை இந்தியா இந்தக் கூட்டினுள் இணைக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அமெரிக்க நலன்களுக்குத் துணைபோகும் இலங்கை அரசாங்கத்துடன் ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தா அணியினர் கொண்டுள்ள நெருக்கம் இந்தியத் தரப்பினை விசனமடையச் செய்துள்ளது.

டக்ளஸ் தேவானந்தவுடன் முரண்பட்டுள்ள ஈ.பி.டி.பி முக்கியஸ்தர்களான கலாநிதி விக்னேஸ்வரன் மற்றும் சங்கர் குணசேகரம் ஆகியோரை மட்டும் அழைத்து இந்தியத் துணைத் தூதுவர் பேசியுள்ளார். இந்தச் சந்திப்பையடுத்து ஈ.பி.டி.பியினுள் முரண்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் சங்கர் வெளிநாடு ஒன்றுக்குத் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிக விரைவில் விக்னேஸ்வரன் இந்திய ஆதரவுடன் தனித்துச் செயற்படும் நிலை உருவாகலாம் என்றும் அல்லது ஆனந்தசங்கரி தலைமையில் உருவாக்கப்படும் புதிய கூட்டணியில் ஆலோசகராக நியமிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய துணைத் தூதுவரால் நடத்தப்பட்ட விசேட கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் வரதர் அணியின் சிறீதரன் ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்ததாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தியாவின் இந்த நடவடிக்கைகளை அடுத்தே இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா அதிக அக்கறையை வெளிப்படுத்த முனைவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (01)

### ஆசியாவின் பொது வேட்பாளராக

# ஜயந்த தனபாலவை நிறுத்த இலங்கை அரசாங்கம் முயற்சி!

(கொழும்பு)

எதிர்வரும் 2006ஆம் அண்டு இறுதியில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கான தேர்தலில், இலங்கை அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால போட்டியிடுவார் என்று அரசு அறிவித்துள்ளது.

தற்போது ஆசியாவின் பொது வேட்பாளராக ஜயந்த தனபாலவை முன்நிறுத்தும் பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்தோனேசியாவில் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி முதல் நடைபெற உள்ள ஆஃப்ரோ ஏசியன் மாநாட்டில் இதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

கடந்த இரு முறையும் ஆபிரிக்க நாட்டினரே ஐ.நா செயலர் நாயகம் பதவியை வகித்துள்ளதால் இம்முறை ஆசிய நாட்டவருக்கு அப்பொறுப்பினை அளிக்க வேண்டும் என்று இலங்கை அரசு கோரிக்கை எழுப்பவுள்ளது. தாய்லாந்து நாட்டின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சல அந்நாட்டு அரசு ஐ.நா செயலாளர் நாயகம் பதவிக்கான வேட்பாளராக அறிவித்துள்ளது.

தாய்லாந்து பிரதிநிதியை அமெரிக்காவும், இந்தியாவும் ஆதரிக்க முடிவு செய்துள்ளன. அமெரிக்காவும் இந்தியாவும் இப்படியான ஒரு நிலையை மேற்கொண்டால் இலங்கைப் பிரதிநிதியை சீனா, பாகிஸ்தான், ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட நாடுகள் ஆதரிக்கக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# அரசியந்துறைச் செயலகம் கிளிவெட்டியில் திறந்து வைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கிளிவெட்டி அரசியற்துறை செயலகம் மணல்சேனை என்னும் இடத்தில் திருகோணமலை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் எழிலன் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

மணல்சேனை என்னும் இடத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகிய மேற்படி நிகழ்வில் பொதுக் சுடரை மூதூர் கல்வி வலயப் உதவிக் கல்விப் பணிப்பாளர் உதயகுமார் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை திருகோணமலை மாவட்ட நிர்வாக சேவை துணைப்பொறுப்பாளர் தாசன் ஏற்றிவைத்தார். அன்னை பூபதியின் திரு உருவப்படத்திற்கான மலர் மாலையை தேசிய எழுச்சி பேரவை செயலாளர் அணிவித்தார். ஈகச் சுடரை திருகோணமலை மா வீரர் பணிமனைப் பொறுப்பாளர் மதிவாணன் ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து கிளிவெட்டிப் பிரதேச அரசியற்துறை செயலகை பெயர் பலகையை கிளிவெட்டி அரசியற்துறை பொறுப்பாளர் தங்கன் திரைநீக்கம் செய்துவைத்தார். அரசியற்துறை கட்டடத்தை திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வை தொடர்ந்து திருகோணமலை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் எழிலன், மூதூர் பிரதேச செயலர் தங்கரட்ணம், ஓய்வு பெற்ற அதிபர் வீரசிங்கம், கிராம சேவகர் தேவகடாச்சரம் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றியமை குறிப்பிடத்தக்கது.

# சூதாடியோர் மீது சுட்ட பொலிஸார் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சட்டவிரோத சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த குழுவினர் மீது தாக்குதல் நடத்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட ஆறு பொலிஸார் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெற்கு பிராந்தியத்துக்குப் பொறுப்பான பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

திஸ்ஸமகராம பகுதியில் சட்டவிரோதமாகச் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த குழுவினர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன்போது சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த மூன்றுபேரும் பொலிஸார் இருவரும் காயமடைந்தனர்.

சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு குறைந்தபட்சத் தண்டனை வழங்குவதற்குப் பதிலாக அதிகபட்ச தண்டனை வழங்கியமைக்காகவே உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும், ஐந்து பொலிஸாரும் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டதாகவும், இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெற்குப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

# மின்சாரசபை தனியார் மயப்படுத்தல் நாடாளுமன்றமே தீர்மானிக்குமாம்!

### திறைசேரி செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபையைத் தனியார் மயப்படுத்துவது தொடர்பான விடயத்தைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றத்திடம் கையளிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக, திறைசேரி செயலாளர் பி.பீ. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான ஆவணங்கள் ஏற்கனவே அமைச்சரவையிடம் கையளிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை மின்சாரசபை தனியார் மயப்படுத்தப்படுமாயின், அதற்கு இப்போது அமுலில் இருக்கும் 1983ஆம் ஆண்டின் அரச சொத்துக்களை தனியார் மயப்படுத்தல் சட்டத்தின் கீழ் இந்த யோசனையைச் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், மறுசீரமைப்புக்கு அந்தச் சட்டத்தின் கீழ் யோசனையைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவை ஏற்படாது.

சபையைத் தனியார்மயப்படுத்த அமைச்சரவை தீர்மானம் எடுத்தாலும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் அது நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் திறைசேரி செயலாளர் மேலும் தெரிவித்தார்.

### தரம் 1 அனுமதிக்காக

# தேசிய பாடசாலைகளுக்கு ஒரு லட்சம் விண்ணப்பங்கள்!

(கொழும்பு)

அடுத்த ஆண்டு 328 தேசியப் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்தில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக ஒரு லட்சத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் குவிந்திருப்பதாகத் தெரியவருகிறது.

நாடு முழுவதுமுள்ள 328 தேசிய பாடசாலைகளில் 73,800 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு, கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

ஒரு பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்படும் அதிகூடிய பிள்ளைகளின் தொகை 275 எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சையில் சித்தியடையாத 26 ஆயிரம் பேர்வரை மாகாண சபைகளின் கீழுள்ள பாடசாலைகளில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(தே)

# ஐ.தே.கட்சி எம்.பிக்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விலக்கமுடிவு!

### தன்பக்கம் இழுப்பதற்கு அரசு முயற்சி

(கொழும்பு)

ஊழல் மற்றும் மோசடி ஒழிப்பு ஆணைக்குழுவினால் குற்றம் சாட்டப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் 17 முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பத்துப்பேர் மீதான குற்றச்சாட்டுக்களை விலக்கிக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக தெரியவருகிறது.

இந்தவருடத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் அரசியல் யாப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு குற்றம் சாட்டப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின உதவியை அரசு பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பிரதி அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். இது சம்பந்தமாக ஆராய்ந்து வரும் பிரதிஅமைச்சர்கள் குழு விரிவான அறிக்கையொன்றை விரைவில் சமர்ப்பிக்கவுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து ஆளும் கட்சிக்குக் தாவிய அமைச்சர் ரோகித போகொல்லாகம மீது ஊழல் குற்றச்சாட்டு முறைப்பாடு செய்யப்பட்டாலும், அவ ரின் உதவி அரசுக்கு கிடைத்துள்ள தால் தொடர்ந்தும் அந்த விசாரணை நடத்துவது நடைமுறைக்குச் சாத்திய மற்றது என்று பிரதிஅமைச்சர் தெரிவித்தார். (தே)

# கராப்பிட்டிய பிரதேசத்தில் வானில் பறந்த மர்மப் பொருள்!

(கொழும்பு)

காலி - கராப்பிட்டிய பிரதேசத்துக்கு மேலாக கடந்த 13, 14 ஆம் திகதிகளில் மாலை ஏழு மணியளவில் இனங்காண முடியாத பொருள் ஒன்று வானத்தில் பயணம் செய்ததை அங்குள்ள மக்கள் அவதானித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

செவ்விளநீர் போன்ற தோற்றமுடைய இந்த மர்மப்பொருள் முதலில் சிறிதாகக் காட்சியளித்ததோடு, பின்பு பெரிதாகி மறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

கராப்பிட்டியாவில் வசிக்கும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொறியியலாளரான லலித் காரியவசம் இந்த மர்மம் பொருளைப் புகைப்படம் எடுத்துள்ளதோடு, பொலிஸாருக்கு இந்தத் தகவலைத் தெரியப்படுத்தியுள்ளார்.

இதுபோன்ற பல ஆகாயப் பொருட்கள் வானவெளியில் அடிக்கடி காணப்படுகின்றன என்று கொழும்பு பல்கலைக் கழக பூகோள விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சந்தன ஜயரத்தன தெரிவித்தார். (தே)

# கனியவள ஆய்வுகளுக்கு விரைவில் கேள்விப்பத்திரம்

(கொழும்பு)

மன்னார் கடற்பரப்பில் கனிய எண்ணை வளம் இருப்பது தொடர்பாக மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு எண்ணெய் உற்பத்தி தொடர்பாக நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களிடம் கேள்விமனுக்கள் கோரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இலங்கை கனியவளங்கள் தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளர் டைட்டஸ் ஜயவர்த்தன - இலங்கையின் மன்னார் கடற்பரப்பில் கனிய எண்ணை வளம் இருப்பது தொடர்பாக நடத்தப்பட்ட அடிப்படை மட்ட ஆய்வுகள் முடிவடைந்துள்ளன.

அதன் இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்குக் குறிப்பிட்ட பிரதேசத்திலிருந்து எடுக்கப்பட்ட மண் மற்றும் வேறுபல சான்றுகள் அவுஸ்ரேலியாவின் பார்க் நகரில் அமைந்துள்ள ஆய்வுகூடம் ஒன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அடுத்த ஜூன் மாதமளவில் அந்த அறிக்கைகள் கிடைத்தபின் கேள்விமனுக்கள் கோரப்படும் என்று இலங்கை கனியவளங்கள் தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளர் டைட்டஸ் ஜயவர்த்தன தெரிவித்தார்.

# உதவி நிறுவனங்களை விமர்சிக்க ஜே.வி.பிக்கு அருகதையில்லை

### ஹபீர் ஹாசீம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசசார்பற்ற நிறுவனங்களை விமர்சிப்பதற்கு ஜே.வி.பியினருக்கோ அவர்களுடன் இணைந்த ஏனைய அமைப்புகளுக்கோ எந்தவித அருகதையும் இல்லை என ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹபீர் ஹாசீம் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த போது -

சுனாமி நிவாரணப்பணிகளை மேற் கொள்ளும் போது தமது கட்சியின் பெயரைப் பரப்பும் வகையில் பட்டிகளை ஒட்டிக் கொண்டு ஜே.வி.பியினர் பகிர்ந்தளித்த பொருட்கள் அனைத்தும் அரசசார்பற்ற நிறுவனங்களால் பெற்றுக் கொள்ளப்பட்டவையே.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரச சார்பற்ற நிறுவனங்களே முன்னின்றன என்பது அனைவருக்கும் தெரியும். அன்று அவர்களின் உதவிகளைப் பெற்றவர்கள் இன்று அவர்களை விமர்சிக்கின்றனர் என மேலும் தெரிவித்தார். (01)

# இந்தியாவுடனான ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி கைப்பற்றியது!




இந்திய-பாகிஸ்தான் அணிகளிடையே நேற்று டெல்கி பெரோசா கோட்லா மைதானத்தில் இடம்பெற்ற ஆறாவதும், இறுதியுமான ஒருநாள் போட்டியில்- பாகிஸ்தான் 159 ஓட்டங்களால் இந்திய அணியைத் தோற்கடித்ததுடன், தொடரையும் 4:2 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

நேற்றைய போட்டியில் இந்திய அணியில் இரு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. பாலாஜி, கும்ளே ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டனர். அவர்களுக்குப் பதிலாக அகர்கர், ஆசிஷ் நெஹ்ரா ஆகியோர் இடம்பெற்றனர். பாகிஸ்தான் அணியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

பாகிஸ்தான் கப்டன் இன்சமாம் நாணயச் சுழற்சியில் வென்று தமது அணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார். அப்ரிடி, சல்மான் பட் ஜோடி தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். சகீர்கான் வீசிய முதல் ஓவரை சல்மான் பட் எதிர்கொண்டார். அந்த ஓவரில் 2 ஓட்டங்களை எடுத்தார்.

2ஆவது ஓவரை நெஹ்ரா வீசினார். அப்ரிடி அதனை எதிர்கொண்டு விளாசித் தள்ளினார். ஓவரின் 2ஆம், 3ஆம், 4ஆம் பந்துகளில் தொடர்ந்து




3 பவுண்டரிகளை அடித்தார். 5ஆவது பந்தில் சிக்ஸரும், 6ஆவது பந்தில் பவுண்டரியும் அடித்தார். அந்த ஓவரில் அப்ரிடி 22 ஓட்டங்களை எடுத்தார்.

3ஆவது ஓவரில் பாகிஸ்தானின் ஸ்கோர் 28ஆக இருந்தபோது, சல்மான் பட் சகீர்கானின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து சொகைப் மலிக் களமிறங்கினார். 5.2 ஓவரில் பாகிஸ்தான் அணி 50 ஓட்டங்களைத் தொட்டது.

9.2ஆவது ஓவரில் அதிரடி ஆட்டக்காரர் அப்ரிடி நெஹ்ராவின் பந்தில் ஆட்டமிழந்தார். அப்ரிடி 23 பந்துகளில் 6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 44 ஓட்டங்களை எடுத்தார். 3ஆவது விக்கெட்டுக்கு மலிக்குடன் யுகானா ஜோடி சேர்ந்தார்.

இவர்கள் இருவரும் பொறுப்புடன் ஆடினர். சொகைப் மலிக் 59 பந்துகளை எதிர்கொண்டு 6 பவுண்டரிகளுடன் 50 ஓட்டங்களைத் தொட்டார். அவரைத் தொடர்ந்து யுகானா 59 பந்துகளில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் அரைச்சதத்தைத் தொட்டார்.

அவ்வேளை சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த யுகானா 50 ஓட்டங்களில் ரன் அவுட்டானார். அப்போது பாகிஸ்தான் அணியின் ஸ்கோர் 153ஆக இருந்தது. அடுத்து கப்டன்




இன்சமாம் களமிறங்கினார். அவர் தொடக்கத்திலிருந்தே அதிரடியாக விளையாடினார். அணியின் ஸ்கோர் 191ஆக இருந்தபோது, 4ஆவது விக்கெட்டாக 72 ஓட்டங்களில் மலிக்கின் விக்கெட்டை அகர்கர் வீழ்த்தினார்.

5ஆவது விக்கெட்டுக்கு இன்சமாமுடன் யுனுஸ்கான் ஜோடி சேர்ந்தார். இருவரும் இந்தியப் பந்துவீச்சை விளாசித் தள்ளி ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்த ஜோடியின் அபாரமான ஆட்டத்தால் இந்தியப் பந்துவீச்சாளர்கள் திணறினார்கள். இன்சமாம் 53 பந்துகளைச் சந்தித்து 6 பவுண்டரிகளுடன் 50ஓட்டங்களைத் தொட்டார்.

இந்தவேளை, யுனுஸ்கான் 40 ஓட்டங்களில் நெஹ்ராவின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இன்சமாம்-யுனுஸ்கான் ஜோடி 5ஆவது விக்கெட்டுக்கு 95 ஓட்டங்களை எடுத்திருந்தது. அடுத்து களமிறங்கிய ரசாக் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். அந்த ஓவரில் இரு விக்கெட்டுக்கள் வீழ்ந்தன.

ஆட்டத்தின் கடைசி ஓவரில் இன்ச



மாம் 69 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 68 ஓட்டங்களை எடுத்திருந்தபோது சர்ச்சைக்குரிய முறையில் ஆட்டமிழந்தார். அந்த ஓவரின் கடைசிப் பந்தில் அக்மல் ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் நெஹ்ரா, அகர்கர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தனது விக்கெட்டுக்களை வேகமாக இழந்தது. ஷேவாக் 21 ஓட்டங்களில் நவீட்-உல்-ஹசனின் பந்திலும், டெண்டுல்கர் 9 ஓட்டங்களில் இப்திகார் பந்திலும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் ராவிட்-டோனி ஜோடி விளையாடியது. ராவிட் எதிர்பாராத விதமாக 19 ஓட்டங்களில் ரன் அவுட்டானார். அவரைத் தொடர்ந்து நன்றாக ஆடிக்கொண்டிருந்த டோனியும் அர்ஷத் கானின் பந்தில் அப்ரிடியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் 5ஆவது விக்கெட்டுக்கு களமிறங்கிய யுவராஜ் சிங்கும் யுகானாவால் ரன் அவுட் செய்யப்பட்டு வெளியேறினார்.

பின்னர் கைவ்வும் ரசாக்கின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில்



ஆட்டமிழந்தார். அவர் 4 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார். அகர்கர் 16 ஓட்டங்களை எடுத்து அப்ரிடியின் பந்தில் யுகானாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். சகீர்கான் 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து நெஹ்ராவும் அப்ரிடியின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இறுதியாக இந்தியா 144 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. எனவே, பாகிஸ்தான் 159 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதனால் 6 போட்டிகள் கொண்ட தொடரை 4:2 என்ற கணக்கில் பாகிஸ்தான் கைப்பற்றியது.

ஆட்டநாயகன் விருது சொகைப் மலிக்கிற்கும், ஆட்டத் தொடர் நாயகன் விருது நவீட்-உல்-ஹசனுக்கும் வழங்கப்பட்டது.

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி யாழ்.பொது விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகமும், மாலை 5 மணிக்கு நடைபெறும் மற்றைய ஆட்டத்தில் திருவள்ளுவர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து போர்த்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

திளையாட்டு

## தேசியமட்ட போட்டி






தியாகி அன்னை பூபதி நினைவாக தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பரந்தன் இந்து இளைஞர் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின.

இதில் 13 விளையாட்டுக் கழகங்கள் மோதுகின்றன. ஆண், பெண் இருபாலாருக்குமான கிளித்தட்டு போட்டி, வலைப்பந்தாட்டம் என்பன இடம்பெற்று வருகின்றன. இந்த விளையாட்டுப் போட்டிகள் இன்றுவரை இடம்பெறவுள்ளன.

இதில் வெற்றியீட்டும் அணிகள் இறுதிப் போட்டியில் நாளை இரவு மோதவுள்ளன.

## வீரர்கள் மீது வெடிவீச்சு!





இத்தாலியின் மிலன் நகரில் நடந்த சம்பியன்ஸ் லீக் காலிறுதிப் போட்டியில் ஏ.சி. மிலன், இன்டர் மிலன் அணிகள் மோதின. இதில் ஏ.சி. மிலன் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தபோது, ரசிகர்கள் கோல் காப்பாளர் டிடா மீது வெடியை வீசிவிட்டனர். இதனால் ஆட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

ரசிகர்களின் வன்முறை மேலும் அதிகமாக மைதானம் எங்கும் மத்தாப்பு மழை பொழியத் தொடங்கியதால், பாதுகாப்பு அதிகாரிகள், வீரர்களை பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

## கங்கூலி மீதான விசாரணை இன்று தீர்ப்பு வெளியாகும்!

சௌரவ் கங்கூலிக்கு ஆறு ஒரு நாள் போட்டிகளில் தடை விதிக்கப்பட்ட விவகாரத்தில் ஐ.சி.சி., விசாரணை ஆணையாளர் இன்று இறுதித் தீர்ப்பு வழங்கவுள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் போட்டித் தொடரின் அடுத்தடுத்த போட்டிகளில், குறிப்பிட்ட நேரத்தில் இந்திய அணி பந்துவீசி முடிக்கவில்லை. இதற்காக அணியின் கப்டன் சௌரவ் கங்கூலிக்கு, ஆறு ஒருநாள் போட்டிகளில் விளையாடத் தடை விதித்தது சர்வதேச கிரிக்கெட் சபை. இந்தத் தடையை எதிர்த்து மேல் முறையீடு செய்துள்ளார் கங்கூலி.

முறையீடு மீதான விசாரணையை ஐ.சி.சி., நன்னடத்தைப் பிரிவு அதிகாரி மைக்கல் பொலோப் நடத்தவுள்ளார். விசாரணையை இரு விதங்களில் அவர் நடத்தலாம். தாமதத்துக்கான காரணம் என்ன என்று விளக்கமளித்து 17 பக்க அறிக்கை அனுப்பியுள்ளார் கங்கூலி.

இந்த அறிக்கை மற்றும் போட்டி நடுவர்களின் அறிக்கை ஆகியவற்றைப் படித்து, அதன் அடிப்படையில்



தீர்ப்பளிக்கலாம்.

அல்லது, தொலைபேசி மூலம், கங்கூலியிடம் நேரடி விசாரணை நடத்தியும் தீர்ப்பு வழங்கலாம். கங்கூலி அனுப்பிய அறிக்கையைப் படித்து, அதன் அடிப்படையில் பெலோப் தீர்ப்பு வழங்குவார் என்று தெரிகிறது.

அப்படிப் பார்த்தால், இன்று இந்த விடயத்தில் இறுதித் தீர்ப்பு வந்துவிடும். கங்கூலிக்கு அளிக்கப்பட்ட ஆறு போட்டிகளின் தடை தண்டனையைக் கூட்டவோ, குறைக்கவோ அல்லது ஒட்டுமொத்தமாக ரத்துச் செய்யவோ விசாரணை அதிகாரிக்கு அதிகாரம் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

## குத்துச் சண்டைப் போட்டியில் ஜப்பான் வீரர் சம்பியனானார்!



(ரோக்கியோ)

ரோக்கியோவில் நடைபெற்ற டபிள்யூ.பி.ஏ மினிமம் வெயிட் குத்துச் சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் ஜப்பானிய வீரர் ஜுடாக் நிடா வெற்றி பெற்றார். 12ஆவது சுற்றில் இவர் தென்கொரிய வீரர் கிம் ஜே ஓங்கை வீழ்த்தினார்.

## கரவெட்டி பிரதேச செயலக மட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்!

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் அனுசரணையுடன் வடமராட்சி தெற்கு-மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில்- உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம், வதிரி டயமன் விளையாட்டுக் கழகத்தை 2-1 என்ற கோல் அடிப்படையில் வெற்றிகொண்டது.

பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் பொம்மஸ் விளையாட்டுக் கழகத்தை மனோகரா விளையாட்டுக் கழகம் 1-0 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

நடந்துமுடிந்த சகல விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றிய கழகங்களில் ஆண்கள் பிரிவில் பொம்மஸ் விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் ஜீவகன் விளையாட்டுக் கழகமும் வெற்றிக் கேடயங்களைத் தட்டிக் கொண்டன.

அத்துடன் துடுப்பாட்டப் போட்டி ஆண்கள் பிரிவில் வெக்ரர் விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் மனோகரா விளையாட்டுக் கழகமும்-

கரப்பந்தாட்டப் போட்டியில் ஆண், பெண் இரு பிரிவுகளிலும் சிவகுமாரன் விளையாட்டுக் கழகமும்-

எல்லே விளையாட்டுப் போட்டியில் ஆண், பெண் இரு பிரிவுகளிலும் மனோகரா விளையாட்டுக் கழகமும்-

கபடி விளையாட்டுப் போட்டியில் பொம்மஸ் விளையாட்டுக் கழகமும் -

வலைப்பந்தாட்டப் போட்டியில் மனோகரா விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றன. (13)

# செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களுக்கு எச்.ஐ.வி. விழிப்புணர்வு பயிற்சிநெறி!

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 10 செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களுக்கான எச்.ஐ.வி. விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறையொன்றை மார்ச் மாதம் 30 ஆம் திகதி முதல், ஏப்ரல் 3 ஆம் திகதி வரை - இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமைச் செயலகமும், யாழ்ப்பாணக் கிளையும் இணைந்து யாழ்ப்பாணத்தில் நடத்தின.

மருத்துவ அதிகாரி ஆர்.சிவசங்கர், பொது வைத்திய அதிகாரி கே. நக்கீரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் எச்.ஐ.வி.தடுப்புப் பிரிவு உதவிப் பணிப்பாளர் எஸ்.எச். பிரேமதிலக, யாழ்ப்பாணத்திலுள்ள எச்.ஐ.வி. நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளார் எ.ஜே.ரொனால்ட், சுகாதாரத் திணைக்களத்தின் பதில் சுகாதார கல்வியாளர் எஸ்.திவ்வியகுமார் ஆகியோர் இந்த ஐந்துநாள் பயிற்சிநெறியின் வளவாளர்களாகப் பங்குபற்றியிருந்தனர்.

பயிற்சி முறைகள், உளவளத் துணை, வாழ்க்கைத்திறன்கள், தனியாள் சுகாதாரம், தொடர்பாடல், திட்டமிடல் என்பவை உள்ளடங்கலாக எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் பற்றிய விரிவான பயிற்சி இவர்களுக்கு அளிக்கப்பட்டது. பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பயிற்சியாளர்களாகப் பயிற்சி பெற்ற இந்தத் தொண்டர்கள் தத்தம் பிரதேசங்களில் மாதத்தில் குறைந்தது மூன்று விழிப்புணர்வூட்டல் கருத்தரங்குகள் நடத்தவும், மேலும் தொண்டர்களைப் பயிற்றுவிப்பதிலும் ஈடுபடுவார்கள். இதற்கமைய வடமராட்சியில் முனை, பொலிகண்டி, புனித நகர், கற்கோவளம், சக்கோட்டை, சுப்பர்மடம், அல்வாய் ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் இந்த முதல் இவர்கள் எச்.ஐ. வி. மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

# நெடுந்தீவு பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர் நியமனம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச பாடசாலைகளுக்கு ஐந்து ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு முதலாம் தவணை இறுதிப் பகுதியில் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

தொண்டர் ஆசிரியர் நியமனத்தின் அடிப்படையிலேயே நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் ஐந்து பேருக்கு நெடுந்தீவுப் பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு மகாவித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாலயம், சீக்கிரியாம்பள்ளம் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம் என்பவற்றுக்கு தலா ஒருவரும் - றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரிக்கு இருவரும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

டேவிற் வீதி, யாழ்ப்பாணம் பகுதியில் தாம் பாவித்து வந்த உபவீதியை மறித்து சட்டவிரோதமாக வீடுகள் கட்டியமை தொடர்பாக யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்காததையடுத்து, அந்தப் பகுதி மக்களால் யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

டேவிற் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்து க.மரியநாயகம் என்பவர் பாவித்துவந்த உப வீதியை இரு வீட்டுக்காரரர் மறித்து 1997 ஆம் ஆண்டு வீடுகளைக் கட்டியுள்ளனர்.

இது தொடர்பாக மாநகர சபையினருக்கு அறிவித்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காததையடுத்து குறிப்பிட்ட நபர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# அரசடி சிவகாமசுந்தரி ஆலயத்துக்கு தேர் அமைக்கும் பணி ஆரம்பம்!

(திருநெல்வேலி)

திருநெல்வேலி - அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயத்துக்கு புதிய எண்கோண சித்திரத்தேர் அமைக்கப்படுவதற்கான முன்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மேற்படி ஆலயத்துக்கு 1991 ஆம் ஆண்டு பல சிரமங்களுக்கு மத்தியில் அம்பாள் அடியார்களால் அமைக்கப்பட்ட நவகோண சித்திரத்தேர் 1995 ஆம் ஆண்டு இராணுவத்தினர் மேற்கொண்ட சூரியகதிர் நடவடிக்கையில் முற்றாக அழிக்கப்பட்டது.

மேற்படி தேர் அழிக்கப்பட்டமையால் நீண்டகாலமாகக் கட்டுத் தேரையே பயன்படுத்திவந்த பக்தர்கள் இந்தக் குறையைப் போக்க வேண்டும் என்று தாமாக முன்வந்து ஆலயத்துக்குப்புதிய சித்திரத்தேரை அமைக்கும் பணியை மேற் கொண்டு வருகின்றனர்.

அடுத்த ஆண்டு புதிய எண் கோண சித்திரத்தேர் அமைக்கும் பணி முடிவடைந்து வெள்ளோட்டம் விடப்படும் என்றும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (63)

# புனிதநகர் வீதி திருத்தப்படாமையால் போக்குவரத்துக்கு அசௌகரியம்!

(பருத்தித்துறை)

தும்பளை புனித நகர் கிராமத்துக்குச் செல்வதற்கான வீதி புனரமைக்கப்படாமையால் கிராம மக்கள் நாளாந்தம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மிக நீண்டகாலமாக கிராம மக்களால் அமைக்கப்பட்ட வீதியாலேயே போக்குவரத்துக்கள் இடம்பெற்றன. இந்த வீதியைப் புனரமைப்பதாகக்கூறி கடந்த 4 மாதங்கள் வீதியில் கற்கள் பரவப்பட்ட நிலையில் போக்குவரத்துச் செய்ய முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

வீதியைப் புனரமைப்பதற்கான ஒப்பந்தம் எடுத்தவர்கள் வீதியின் அகலத்தை நான்கு அடிவரையில் குறைத்துள்ளதுடன், அந்தப் பகுதியில் கிடைத்த தரமற்ற கற்களைக் கொண்டு புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டமையாலேயே இது இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் இங்குள்ள மக்கள் தெரிவித்தனர். (91)

# உளநல ஆற்றுப்படுத்தல் தொடர்பான பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

விழி உளசமூக மேம்பாட்டு அமையம் நடத்தும் உளநல ஆற்றுப்படுத்தல் தொடர்பான 6 மாதகால சான்றிதழ் பயிற்சிநெறி - கச்சேரி ரயில் நிலைய வீதியிலுள்ள அலுவலகத்தில் நடைபெற்றுவருகிறது.

ஜப்பானின் நிதியுதவியுடன் நடத்தப்படுகின்ற விழி உள சமூக மேம்பாட்டு அமையம் - வெவ்வேறு வகையான ஆற்றுப்படுத்தல் ஆலோசனைகளையும், குடும்பநல ஆற்றுப்படுத்தலையும் அலுவலக நேரத்தில் மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை சிறுவர்களை, உள்ளடக்கியதான அவர்களது ஆக்கங்களைத் தாங்கியதான இருமாத சிறுவர் இதழ் ஒன்றையும் அமையம் வெளியிடவுள்ளதாகவும் நிறுவனத் தலைவர் தெரிவித்தார். இந்தப் பயிற்சி நெறியில் 30 பேர் பங்குகொண்டு பயிற்சி பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)

## முத்துமாரியம்மன் மஹோற்சவம்

ஊர்காவற்துறை தம்பாட்டி தூணிபுரம் முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (51)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஏழாவது அகவையில்



பெயர்:- உ.யசோதரன்
முகவரி:- வட்டக்கச்சி

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


# வறிய மாணவர்கள் 30 பேருக்கு பிரான்ஸ் ஒன்றியம் நிதியுதவி!

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் உள்ள உயர்தரப் பாடசாலைகள் மூன்றிலும் கல்வி பயிலும் வறிய மாணவர்கள் 30 பேருக்கு உதவித் தொகையாக தலா 3 ஆயிரம் ரூபா பிரான்ஸ் செயற்பாட்டு ஒன்றியம் என்ற அமைப்பால் வழங்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து பிரான்ஸில் வசிக்கும் நெடுந்தீவைச் சேர்ந்த உறவுகளால் ஒவ்வொரு பாடசாலைகளிலும் 10 வறிய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு மகா வித்தியாலயம், றோமன் கத்தேலிக்க மகளிர் கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்தக் கொடுப்பனவு நெடுந்தீவுப் பங்குத்தந்தை ஊடாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(113)

# மட்டுவில்-சரசாலை பகுதிக்கு மின்விநியோகம் இன்னமும் இல்லை

மட்டுவில் வடக்கு, சரசாலை, கல்வயல், பகுதிகளுக்கான மின் விநியோகப் பணிகள் தொடர்ந்தும் காலதாமதமாவது குறித்து அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

2002 ஆம் ஆண்டு முதலே இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். தென்மராட்சியின் பல பகுதிகளுக்கும் மின் விநியோகம் ஏற்கனவே வழங்கப்பட்டபோதிலும் -இந்தப் பகுதிகளுக்கு மட்டும் இன்னமும் வழங்கப்படவில்லை.

இது சம்பந்தமாகப் பலதரப்பினராலும் முறையிடப்பட்டதன் பலனாக இந்தப் பகுதிகளுக்கான மின் இணைப்புப் பணிகள் 2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டபோதும் அவை இன்றுவரை பூர்த்திசெய்யப்படாமல் காலதாமதம் செய்யப்படுகின்றது.

இந்தப் பணிகள் விரைவாகப் பூர்த்திசெய்யப்பட்டு மின்விநியோகம் வழங்கப்படல்வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (24)



திருமறைக் கலாமன்றத்தால் சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிப்படைந்த குடத்தனை, மணற்காடு பகுதி சிறுவர்களுக்கும் - யாழ்ப்பாணம், உரும்பிராய் திருமறை கலாமன்ற சிறுவர்களுக்குமான மூன்றுநாள் வதிவிடப் பாசறையில் கலந்துகொண்ட சிறுவர்களையும் - விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர்களையும் காணலாம்.

## விளையாட்டு விழா

(கொடிகாமம்)

தென்மராட்சி பிரதேச செயலக மட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டு விழா எதிர்வரும் 23 ஆம் 24 ஆம் திகதிகளில் நடைபெறும்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் இந்த விழாவுக்கு - தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமை வகிப்பார். 24 ஆம் திகதி மாலை பரிசளிப்பு விழாவும் இடம்பெறும். (24)

## கொக்கி போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டித் தொடரில் பெண்களுக்கான எல்லே போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் திருவள்ளுவர் விளையாட்டுக்கழகம், போத் ஸ்ரார் விளையாட்டுக்கழகம், தொடர்மாடி விளையாட்டுக் கழகம், சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம், பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம், குருநகர் விளையாட்டுக் கழகம், ஆகிய விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

# விவாத சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி நாளை!

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி நினைவு தினத்தை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பினரால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான விவாதச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் - பரிசளிப்பு நிகழ்வும் நாளை காலை கிட்டு பூங்காவில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கு வெற்றிக் கேடயங்களும், தலா 5 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளன. மூன்றாம் இடத்தை வேம்படி மகளிர் கல்லூரி பெற்றுள்ளது. போட்டியில் பங்குபற்றிய அணிகள், போட்டியாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். போட்டித் தொடருக்கான முழு ஆதரவையும் யாழ்.வணிகர் கழகம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர் நன்மைகருதி நூலகங்கள்

(யாழ்ப்பாணம்)

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு இந்த ஆண்டு தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி, நல்லூர் பிரதேச சபையின் நூல் நிலையங்களாகிய - கொக்குவில் பொது நூலகம், நல்லூர் பொதுநூலகம் போன்றவற்றில் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் காலை 8.30 மணிதொடக்கம் இரவு 8.30 மணிவரை தொடர்ந்து இயங்கும் என்று நல்லூர் பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (63)



## கலாசாரம்

# காதல் வானிலே....



### சிறு கதை

பொன்.சுகந்தன்

இரத்தினத்தாருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கோபத்தில் கையைப் பிசைவதும், வாய்க்குள் ஏதோ முணுமுணுப்பதுமாக அங்குமிங்கும் திரிந்தார். "ச்சாய்... நாளைக்கு என்னெண்டு சனத்திலை கண் விழிக்கிறது..."

"என்னங்க... ஊருலகத்திலை நடக்காததையே நம்ம புள்ளை செய்திட்டாள்..." எனச் சமாளிக்க முயன்றபோதுதான் "பளார்" என்றது. இரத்தினத்தாரின் கைகள் மனைவி ராசம்மாவின் கன்னத்தைப் பதம்பார்த்தது. "எல்லாம் உன்னாலைதானடி வந்தது... குமர்ப்புள்ளைகள் இருக்கிற வீட்டிலை யாரு பொடியளை அண்டச் சொன்னது" எனக் கொதித்து விழுந்த இரத்தினத்தாரிடம் "நம்ம புள்ளையோடை படிக்கிற பொடியனென்று சொலலி வரேக்கை... நான்..."

"பொத்தடி வாயை...! இப்படித்தான் இந்தக்காலப் புள்ளைகள் பெற்றோருக்கு ஆப்பு வைக்குதுகள். கண்டறியாத போய்ஸ் பிரண்ட், கேள் பிரண்ட், சோசலிசம் அது இதென்று "றீல்" விடுங்கள்..." என்றபோது, கதவு படார் என்று திறபடும் சத்தம் கேட்டு இரத்தினத்தார் திரும்பினார். இந்தப் பிரச்சினைக்கெல்லாம் காரணமாயிருந்த அந்த இளைஞன் பாபு வந்து கொண்டிருந்தான்.

கண்டதும் இரத்தினத்தாருக்கு இரத்தம் கொதித்தது. வேகமாக முன்னே சென்று "உனக்கிஞ்சை என்ன வேலை... முதலிலை வெளியிலை போ..." சற்றுத் தடுமாறிப்போன பாபு "இஞ்சை பாருங்க முதலிலை நான் சொல்றதைக் கேளுங்கோ... உங்கடை மகளை விரும்பினது உண்மைதான், அதற்காக நான் ஏமாத்தவில்லையே... என்னுடைய பெற்றோருக்கும் நல்ல சம்மதம், அவையோடை கதைச்சு ஆகவேண்டியதைப் பாருஙகோ... அதுதான் சொல்ல வந்தனான்..." என்றுவிட்டு பதிலுக்குக் காத்திராது பாபு திருமபியதும், இரத்தினத்தாரின் கோபமும் சற்றுத் தணிந்த நிலையில் அமைதியாகச் சிந்திக்கத் தொடங்கினார்.

விஷயத்தைப் புரிந்துகொண்ட மனைவி இராசம்மாள் அருகே சென்று "என்னங்க... இப்படியொரு நல்ல சம்பந்தம் கிடைக்க நாங்கதான் குடுத்து வைக்கணும்... நாளைக்கே போய் பாபுவின்ரை தகப்பனோடை கதையுங்கோவன்..." "ஆம்" எனத் தலையசைத்த இரத்தினத்தாரின் மனதுள் ஆயிரம் ஆயிரம் கேள்விக் கணைகள் விடைகாணமுடியாது தவித்தபோதுதான், அருகேயிருந்த சாய்கதிரையில் அமர்ந்து யோசிக்கத் தொடங்கினார்.

இரத்தினத்தார் ஒரு சாதாரண மனிதன் தான். தன் முயற்சியாலும், நம்பிக்கையாலும் முன்னுக்கு வந்தவர். இதனால் உத்தியோகத்தில் பெரிய அதிகாரியாகவும் இருக்கிறார். ஆனால் பொருளாதாரத்துறையைப் பொறுத்தமட்டில் பெரியளவில் வளர்ச்சியடையவில்லை. அதற்குக் காரணமும் உண்டு. உத்தியோகச் சம்பளம் இவரது வீட்டுச் செலவுக்கே போதுமானது. பகுதிநேர வேலையாகத் தோட்டஞ் செய்தாலும் பெரியளவில் இவரால் பொருளாதாரத்தை ஈட்டமுடியாது போய்விட்டது. இவற்றைவிட வெட்கம், மானத்துக்கு உட்பட்ட ஒரு உயர்ந்த மனிதனும்கூட.

இரத்தினத்தாருக்கு மூன்று பெண் பிள்ளைகள். மூத்தவள் படிப்பை முடித்துவிட்டு, கம்பியூட்டர் வகுப்புக்குப்போகும் காலத்தில்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. இரண்டாவது மகளும் உயர்தர வகுப்பில் கற்கின்றாள். மூன்றாவது மகள் தரம் 10 இல் படிக்கிறாள். மூன்றாவது மகளில் எல்லாரும் செல்லம் தான். அவளும் அதற்கேற்ற பிடிவாதக்காரியும். போன வாரம்தான் தனக்கு "நெக்லஸ்" வேணுமெண்டு அடம்பிடித்து தந்தையைக் கொண்டு அழகிய நெக்லஸ் ஒன்றும் வாங்கினாள். அதற்கு முதல் மாதம்தான் எல்லா வீட்டிலேயும் ரீ.வி இருக்குது எங்களுக்கும் வேணுமெண்டு பிடிவாதம் பண்ணி இரத்தினத்தாரும் "லோன்" எடுத்து அந்தக் காசிலை வாங்கிக் கொடுத்தார். இப்படியாக வீட்டுக்குத் தேவையானதுவும், எல்லாப் பிள்ளைகளுக்குத் தேவையான நகை நட்டுக்களையும் வாங்கிவிட்டார். இவ்வாறு ஊருலகத்துக்கு விட்டுக் கொடுக்காமல் வாழ்ந்து கொண்டிருந்த இரத்தினத்தாருக்கு மூத்த மகள் செய்த வேலையானது சேறு பூசியதைப் போலத்தான் போய்விட்டாலும்கூட, அதனையும் கௌரவமாக, நேர்மையான முறையிலேதான் திருமணத்தையும் முடிக்கவென எண்ணினார். தீர்க்கமான முடிவை எடுத்த இரத்தினத்தார் அப்படியே சாய் கதிரையிலேயே உறங்கி விட்டார்...

...காலை விடிந்ததும் தனது கடமைகளை வேகமாக முடித்த இரத்தினத்தார், தனது மகளின் திருமண விடயமாக பாபுவின் தந்தையிடம் கதைக்கச் சென்றுவிட்டார். இராசம்மாளும் போகும் வரையும் மௌனமாக இருந்து வழியனுப்பிவைத்தாள். சோர்வுடன் வந்து திண்ணையிலே அமர்ந்துகொண்டாள். "கடவுளே எந்தவொரு பிரச்சினையுமில்லாமல் என்ரை பிள்ளைக்குக் கல்யாணம் முடிஞ்சிடணும்" என அடிக்கடி இறைவனை வேண்டிக்கொண்டாள். "என்னம்மா... சமைக்கலையோ..." என்ற மூத்த மகளிடம் "எனக்கிண்டைக்குப்புள்ளை உடம்பு சரியில்லை... நீ அரிசியைக் கழுவி உலையிலே போடு வாறன்" விஷயத்தைப் புரிந்து கொண்டவள் பேசாமற்போய் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள்.

நேரம் நகர்ந்துகொண்டிருந்தது. இராசம்மாளும் கண்ணயர்ந்து தூங்கிவிட்டாள். சிறிது நேரத்தின் பின் "படார்" என்ற படலை திறபடும் ஓசையைக் கேட்டுத் திடுக்கிட்டு எழும்பினாள் இராசம்மாள். அங்கே இரத்தினத்தார் வந்துகொண்டிருந்தார். உடனே சேலைத்தலப்பால் முகத்தைத் தொடைத்துவிட்டு எழுந்து சென்று "என்ன...ங்க... என்ன...மாதிரி..."

"எல்லாம் நல்லதாய் முடிஞ்சுது சாத்திரியாரிட்டைப்போய்" நாளும் எடுத்தாச்சு அதுதான் வரப்பிந்திப் போச்சு..." என்றதைக் கேட்டதும் இராசம்மாளுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. இதனை அறைக்குள்ளிருந்து கேட்டுக்கொண்டிருந்த மூத்தமகள் சாருகாவின் உள்ளம் மகிழ்ச்சியில் கூத்தாடியது. ஒருபுறம் தன் காதல் வெற்றியடைந்த திருப்தி, மறுபுறம் காதலுக்கு மரியாதை செய்து கல்யாணம் வரைவந்துவிட்ட அவர்களின் பெருந்தன்மைப் போக்கு, இவற்றையெல்லாம் எணணி பாபுவின் பெற்றோரின் பண்பையும் நினைத்துக் கொண்டவளின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் தாண்டவமாடியது.

"அக்கா உள்ளே நின்று என்ன செய்யிறாய் வெளியே வாவன்" கண்களில் வழிந்த ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துவிட்டு வெளியே வந்தாள். சாருகாவின் முகத்தில் லேசான நாணம் தவழ்ந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. "நெக்லஸ்சின்" அழகினைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்த கடைசித் தங்கை மாலதி "அக்கா... இந்த "நெக்லஸ்சை" வடிவாய்ப் பூட்டிவிடக்கா..." என்றபோது, மாலதியின் முகத்திலே தோன்றிய பூரிப்பினையும், ஆனந்தத்தையும் வர்ணிக்கவே முடியாது.

"இன்றைக்கக்கா கோவிலுக்குப்போறன். கனநாளாய் அப்பாவோடை சண்டைபட்டு வாங்கிய நெக்லஸ் இன்றைக்குத்தான் போடப்போறன் என்றதும் வாய்விட்டுச் சிரித்த சாருகா "அப்பா வாங்கித்தந்த புது நெக்லஸ்ஸைக் காட்டத்தான் கோவிலுக்குப் போறாயென்று சொல்லு" என்றதும் பொய்க் கோபம் மூண்ட மாலதி "அக்கா உனக்கு எப்ப பார்த்தாலும் நக்கல்தான். முதலிலை நெக்லஸைப் பூட்டிவிடு" என்றதும் சாருகா நெக்லஸை வாங்கிக் கழுத்திலே பூட்டக் கொண்டுபோனபோது, தாயும் உள்ளே வந்தாள். "மாலதி இஞ்சை வா உன்னைத்தான் தேடிக்கொண்டு வாறன்... கல்யாண வீட்டுக்குப் பலகாரம் சுடவேணும், சித்திக்கும், கையோடை மாமி வீட்டுக்கும், பக்கத்திலை பெரியண்ணா விட்டையும் சொல்லிப்போட்டு வா... புள்ளை..." என்றுவிட்டு பதிலுக்குக் காத்திராது தன் வேலைகளைக் கவனிக்க உள்ளே சென்றுவிட்டாள். "ச்சாய்... கிழவி வந்து குழப்பிப்போட்டுது..." என மனதுக்குள் செல்லமாகக் கடிந்த மாலதி, சரியக்கா இதைப் பெட்டிக்குள்ளே வையுங்கோ நான் வெளியிலே போட்டுவாறன் என்று விட்டு மாலதி சென்றுவிட்டாள்.

சிறிது நேரத்துக்குள் உறவுகள் எல்லாம் வந்து சூழ்ந்து கொண்டன. பலகார வேலைகள் தடல்புடலாக நடந்துகொண்டிருந்தது. அப்போதுதான் பெரிதாகச் சிரித்துக் கதைத்தபடி தன் நண்பிகள் வந்து கொண்டிருப்பதைக் கண்டாள் சாருகா. உடனே வெளியே சென்று "ஏய்... வாங்கடி... ஏன்டி இவ்வளவு லேற்றா வாறீங்க" "நாங்கள் லேற்றா வந்தாலும் லேற்றஸ்சாத்தான் வருவோம்" என ஒரு பாபா ஸ்டைலில் சொன்னதும் எல்லாரும் விழுந்து விழுந்து ஒரே சிரிப்புத்தான்...

"பாரடி மங்களம் இந்தக்கால பொடிபொட்டையளின்ரை கிண்டலையும், கேளிக்கையையும் பாரு. அந்தக் காலத்திலையென்றால்..." எனப் பலகாரம் சுட்டுக்கொண்டிருந்த கிழவி தொடங்கியதும்..." வாங்கடி அறையுக்குள்ளேயிருந்து கதைப்பம்... இது கிழடு கட்டைகளுக்குப் பிடிக்காது..." எல்லாரும் உள்ளே சென்றனர்.

"என்னடி சாரு இவ்வளவு சீக்கிரமாய் உன்ரை காதல் வெற்றியடைஞ்சிட்டுதடி... நான் ஏதோ எங்கடை இனப்பிரச்சினை மாதிரி இழுபட்டுக்கொண்டிருக்கும் என நினைச்சன்..." என்றதும் மீண்டும் சிரித்தார்கள்.

இவ்வாறாக சிறிது நேரம் ஒரே சிரிப்பும், கதையும்தான்..." சரியடி நாங்கள் நேரத்துக்குப் போகணுமடி. போனால்தான் கல்யாண வீட்டுக்கு வாறதற்கான ஆயத்தங்கள் செய்யலாம்..." என்றாள் ஒருத்தி. மற்றவள் "என்னடி ஆயத்தம் இப்பத்தானே பிளாஸ்ரிக் பூ மாலை கிடக்குது. பூப்பிடுங்கிற வேலையும் இல்லை..."

"அப்படித்தான்டி சில இடங்களிலை..." என மற்றொருத்தி தொடங்கவும், "இவள் தொடங்கினால் விடிஞ்சுபோடும். சரி நாங்கள் போட்டுவாறம்..." என்றுவிட்டு எல்லாரும் விடைபெற்றனர். "வேளைக்கே வந்திடுங்கடி" இது சாருகாவின் வேண்டுதல். இவ்வாறாக அன்றைய பொழுது மகிழ்ச்சிகரமாகக் கழிந்தது...

...திருமணநாள் நன்றாகக் களைகட்டியது. ஊருக்கு விட்டுக்கொடாது இரத்தினத்தார் திருமணத்தை பெரிதாகவே நடத்தி முடித்தார். திருமணமும் வெகு சிறப்பாகவே இனிதாகவே நடந்து முடிந்தது. தங்களுடனேயே மருமகளும் இருக்கவேண்டும் என அன்பாக பாபுவின் பெற்றோர் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து, சாருகாவும் அவர்கள் விருப்பப்படியே சென்றுவிட்டாள்.

சாருகாவும் தன் மாமன், மாமிக்கு ஒரு பெற்ற மகளாகவே செயலாற்றினாள். தங்களது காதலுக்கு மரியாதை கொடுத்து மருமகளாக்கிக்கொண்ட தன் மாமன், மாமியை எப்போதும் நன்றியுணர்வுடனேயே பார்ப்பாள்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை திருமணம் செய்து முதல்நாள். கோவிலுக்குப் போவதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தது. "இந்தாப்பா... இந்த விறகையும், பானையையும் வானுக்குப் பின்னுக்கு வையுங்கோவன்..." வாகனத்தில் புக்கை பொங்குவதற்குரிய சாமான்கள் அனைத்தும் ஏற்றப்பட்டன. "சரி புள்ளை ஏறுங்கோவன்..." சற்றுத் தயங்கிய சாருகா ஏதோ வினாவ நினைப்பது தெரிந்த மாமனார்


"என்ன புள்ளை ஏதும்... பிரச்சினையோ..."

"இல்லை மாமா போகிற வழியிலை வீட்டைபோய் தங்கைச்சியையும் கூட்டிக்கொண்டு போவம் அவளுக்குக் கோவிலுக்குப் போறதெண்டால் கொள்ளையாசை..."

"சரி... சரி அப்படியே செய்வம். வாகனத்தை நேரே சம்பந்தி வீட்டுக்கு விடுங்கோ..." என்றதும் வாகனம் கிளம்பியது. சிறிது நேர ஓட்டத்தின் பின் சாருகாவின் வீட்டின் முன்னால் வாகனம் நின்றதும் "சாரு நீ போய் கூட்டிவா நாங்களும் வந்தால் நிண்டிடுவம் நேரம் போயிடும்..." என பாபு கூறியதும், இறங்கிய சாருகா உள்ளே சென்றதும் சாருகாவைக் கண்டதும் எல்லாரது முகமும் ஆனந்தத்தில் மலர்ந்தது. "ஏய் மாலதி வெளிக்கிடன் கோவிலுக்குப் போவம்..."

"நான் வரலையக்கா... நீ போட்டுவா..." சாருகாவின் முகம் மாறியது. பலதடவை கேட்டும் மாலதி மறுக்கவே கோபத்தில் எல்லாரையும் பேசிவிட்டு "ச்சாய் உங்களாலை எனக்கு எவ்வளவு அவமானம்..." என்று விடடுத் திரும்பிச் சென்றதும், உள்ளே மாலதி தன் தாயின் மடியில் விழுந்து அழத்தொடங்கினாள். "பாரம்மா... அக்கா கோவிச்சுக்கிட்டுப் போகுது..." மாலதியின் தலையைக் கையால் தடவியபடி "அழாதை புளளை என்ன... குழந்தைமாதிரி..." தலையை நிமிர்த்தித் தாயைப் பார்த்துப் பரிதாபத்துடன் "அம்மா... நான் கோவிலுக்கு அக்காகூடப் போனா நகை நட்டென்று கழுத்திலை இல்லையென்றால், அக்கா விசாரிச்சு விஷயத்தைக் கண்டுபிடிச்சிடும்... அவ கல்யாணத்துக்காகத்தான் எங்கடை நகைநட்டு, தோட்டம் எல்லாம் வித்துத்தான் பத்துலட்சம் குடுத்ததென்று தெரிஞ்சால் அக்கா மன முடைஞ்சு போடும்" என்றதும் "உண்மை தான் புள்ளை அவர் மானம், கௌரவத்தை விடக் கூடாதென்ற ஒன்றுக்காக, இல்லாத போதும் சம்மதித்து காசைக் கொடுத்ததனாலே தானம்மா... காசுக்கு மரியாதை கொடுத்து கல்யாணம் நடந்தது..." என்றபோது எதிரே தொங்கிக்கொண்டிருந்த தாஜ்மஹால் படத்தைப் பார்த்தாள்... ❑

# பாதை!



நடந்து நடந்து
கால்பாதம் தேய்ந்து
ரேகையில்லாமல் அழிந்து
விடுகிறது.
பாதை மட்டும் அழியாமல்
புதியவர்களுக்கும் வழி
விடுகிறது.

வழி நெடுக மரங்களின்
நிழல்,
ஆறுதல் அடைய
ஒதுங்குகின்றோம்.
ஆறுதல் இல்லாமல்
பாதை மட்டும் வழி விட்டுக்
கொண்டிருக்கிறது.

பயணம் தொடர்கிறது....

காய்ந்த மரச்செடி
முள் நிறைந்த பற்றைகள்
வண்ணத்துப் பூச்சி ஆயுள்
தேடுகிறது.
பட்டும் படாமலும்
முள்ளின் மேல் உட்கார்ந்து
கொண்டிருப்பதை விட
முள் பற்றைக்குள்ளால்
பறந்து திரிவது
அழகாக இருக்கிறது.
பழக்கப்பட்டிருக்கும்
வண்ணத்துப்பூச்சியின்
வாழ்க்கை
பயனுள்ள போது
முள்ளும் இங்கே
தோற்றுப் போகிறது.

பயன்படாத இடமென்று
ஒன்றுமில்லை,
நடைப்பயணம்
ஆரம்பம் வகிக்கிற
போது
எந்த இடத்திலும்
தங்கி விடவும்
மீண்டும் நடந்து கொள்ள
முடிகிற சூழலில்
நிறையப் பேரை
விலக்கிக்கொள்ள முடியாமலும்
ஒரு சிலருடன்
சேர்ந்து போக முடியாமலும்
இருக்கிற போதுதான்
எந்த இடமும் பயன்படுகிறது.

வழிவந்த உறவுகளின் ஆரம்பம்
பயணிக்க வைக்கிறது
இன்றுவரை.
வசதிகள் எம்மை சூழ்ந்தாலும்
ஒன்றுமேயில்லாத இந்த

வாழ்வில்
ஆரம்ப நடைபயணம்
தான்
எம்மை தக்க வைக்கிறது.

முன்னுக்கு சென்று விட
வேண்டும்,
களைக்காமல் நடக்கிற
வாழ்வில்
எம்மில் குறையாமல்
இருப்பது
ஆசை.

முன்னுக்கு பின்னுக்கு
வந்தும்
எதிர்பார்ப்பது கிடைக்காமல்
எதிர்பார்க்க முடியாமல்
சந்தித்து விடுகிற எதுவும்
பயனுள்ளதாகுமென்று
நினைக்காததால் தான்
கிடைக்காததை
தேடுகின்றோம்.

பாதையில் ராங்களாக
வழி தவறுகின்ற போது
தான்
எல்லோரும் நடக்க முடிகிறது.

ஒவ்வொருவரும்
செல்கின்ற பாதை
ஒன்றாக இருக்கிறது.
வேறு ஒரு இடத்திற்கு
சென்று விடுவதற்கு
சந்தி இருப்பது போல
பாதையும்
பிரிந்து சென்றாலும்
பயணத்திற்கு இடையூறாக
என்றுமே இருந்ததில்லை.

பயணிக்கப் பிடிக்கின்ற
போதுதான்
விபத்துக்களாக இருந்தும்
கூட்டம் அதிகமாக
இருக்கும்.

பரந்துபட்ட
மனப்பாங்குடன்
எல்லோரையும் அனுமதித்து
பயணிக்கவிட்டு
புகழ் பேசுகின்ற
வாழ்க்கையில்
புதியவர்கள் வருகின்ற போதும்
பாதை மாறாமல்
இருந்து விடுகின்றதனால்
எங்களை
மாற்றிக்கொள்ள முடியவில்லை.

செல்வா.

# விழுகின்ற போது விழவாமற் போனது

(சென்றவாரத் தொடர்ச்சி....)

தமிழ்நாட்டிலிருந்து அறிவுமதி.

இந்தத் தாயின் அழுகை இந்திய தமிழச்சியின் அழுகையா? ஈழத்து தமிழச்சியின் அழுகையா? என்று இனம் பிரித்து பார்க்க முடியாத அழுகைதான் ஆனாலும், உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் தான் எத்தனை வேறுபாடுகள். உங்கள் வானொலிகள் தமிழ் உறவுகளை இழந்தோம் என்று சொல்லிக்கொண்டிருக்கையில், எங்களின் வானொலிகள் மீனவர்கள் செத்தார்கள் என்று அறிவித்துக்கொண்டிருந்தது.

உங்கள் தொலைக் காட்சிகள் அனைத்து நிகழ்ச்சிகளையும் அடியோடு நிறுத்திவிட்டு, இறந்தவர்களின் விபரங் களை இரக்கத்தோடு சொல்லிக் கொண்டிருக்கையில், எங்கள் தொலைக்காட்சிகள் எந்த நிகழ்ச்சிகளையும் இடைநிறுத்தம் செய்யாமல் அடியில் மட்டும் 5000 பேர் செத்தார்கள் என்று அடிக்கடி ஓடவிட்டு அரை குறையாடையுடன் இன்று பிறந்தவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

உங்கள் கடலோரங்களில் இறந்த குழந்தையையும் பொறுப்போடு எடுத்து போராளிப் பெண்கள் பூப்போல குளிப்பாட்டி புதை குழிக்குள் அனுப்புகையில், எங்கள் கடலோரங்களில் இறந்த உறவுகளையெல்லாம் குப்பைகளைப் போல் குழிகளுக்குள் வீசிக் கொண்டிருந்தார்கள்.

உலகத் தமிழர்களே!

உங்களுக்கெல்லாம் இறந்த பிறகும்அவர்கள் ஈழத்தமிழ் உறவுகள். எங்களுக்கெல்லாம் இறந்த பிறகும் இவர்கள் இந்தியப் பிணங்கள்.

நீங்கள் தீவிரவாதிகள், அதனால்தான் பாதிக்கப்பட்ட சிங்கள இராணுவ முகாம் களையும் உங்கள் உழைப்புகளால் சரிப் படுத்தி உயரிய பண்போடு ஒப்படைக்கிறீர்கள். நாங்கள் தேசபக்தர்கள் அதனால்தான் எங்கள் ஏழைக் குடும்பங்களையும் ஏறிய விமானத்தில் இருந்தே எட்டிப் பார்த்து விட்டு மக்களைக் காப்பாற்றும் பொறுப்பை மக்களிடமே ஒப்படைக்கிறோம்.

நீங்கள் மனிதாபிமானமற்றவர்கள். அதனால்தான் காயப்பட்டு வந்த சிங்கள இராணுவ வீரர்களுக்கும் மருத்துவம் பார்த்து காப்பாற்றி, அதிரடிப் படையினரிடம் அன்போடு ஒப்படைக்கிறீர்கள். நாங்கள் மனிதாபிமானமுள்ளவர்கள். அதனால் தான் காயம் பட்டுக் கிடக்கும் உறவுகளுக்கும் ஊர்திகள் கொடுக்காமல் ஓட்டம் எடுக்கிறோம்.

என்ன செய்ய? என்ன செய்ய?

உங்களுக்கென்று ஒரு நாடு இல்லை. ஆனால் உங்களுக்கென்று ஒரு அரசாட்சி நடக்கிறது. எங்களுக்கென்று ஒரு நாடு இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் எங்களுக் கென்று ஒரு அரசாட்சி நடக்கவில்லை.

உங்கள் தலைவர் மறைமுகமானவர். ஆனால் அவரது செயல்கள் வெளிப்படையானவை. எங்கள் தலைவர்கள் வெளிப்படையானவர்கள். ஆனால் அவர்களது செயல்கள் மறைமுகமானவை.

ஆம்... ஆம்... அதனால்தான் உங்கள் தலைவர் இந்தியத் தமிழர்களுக்கும் சேர்த்து தம் ஆழ்ந்த இரங்கலை ஆதரவாய் சொல்லி இருக்கிறார். உலகத் தமிழ் உறவுகளே! அவர் மட்டும் இல்லை என்றிருந்தால், அவரது தொலைநோக்கு பார்வையால் புனர் வாழ்வு அமைப்பு மட்டும் பூத்திருக்காவிட்டால், இன்னும் எத்தனை எத்தனை உயிர்கள் அங்கே கருகிப்போய் இருக்கும்.

உறவுகளே! உறவுகளே!

எம் தமிழீழ உறவுகளே! அங்கே பாருங்கள் அன்புத் தலைவனால் வளர்க்கப்பட்ட - அந்த சாகத் துணிந்த போராளிகள் நம் உறவுகளுக்கு சாவு வந்து விடாமல் இருப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கட்டமைப்புகள் மட்டும் இல்லாமல் போயிருந்தால், இன்னேரம் இந்த ஆழிப் பேரலை நம் ஈழத்தை இல்லாமல் செய்திருக்கும். இந் தக் கட்டமைப்பை உருவாக்கக் கடல் கடந்த உறவுகளே!

நீங்களும் கடும் உழைப்பைச் செய் திருக்கிறீர்கள். அதற்கு நன்றியாகத் தான் அண்ணன் பால சிங்கம் இப்படிக் கூறினார். 18000 போராளிகளை பலி கொடுத்து, பல்லாயிரம் தமிழ் உறவுகளை பலி கொடுத்து, லட்சக்கணக்கான தமிழ் உறவுகளை இடப்பெயர்வுகளுக்கு உள்ளாக்கி தமிழ் தேசிய இனமே திக்குத்தெரியாது தவித்த காலத்தில் முறைப்படுத்தப்பட்ட இராணுவத்தை உருவாக்கியது புலம் பெயர் தமிழர்கள் தாம்.

ஆம்....

புலம் பெயர்ந்த தமிழர்களே. ஒவ்வொரு பயணத்திலும் உங்களின் பங்களிப்பை நேரிலே கண்டு நெஞ்சுவிம்ம நெக்குறுகிப் போனவன் நான். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் உங்களிடம் புனர் வாழ்வுக்காக கையேந்தி வந்தவன் நான். சலிப்படையாமல் நீங்களும் அள்ளி அள்ளி தந்ததை இங்கே சொல்லிச் சொல்லி வியந்தவன் நான்.



ஒருவகையில் பார்த்தால் புனர்வாழ்வும் ஆழிப்பேரலையும் ஒன்றுதான் என்று நீங்கள் உரக்க கூறலாம்.

ஆம்.... ஆழிப்பேரலையும் உங்களிடம் ஒன்றை விடாமல் பறிக்கப்பார்க்கிறது. புனர்வாழ்வு அமைப்பும் உங்களிடம் ஒன்றையும் விடாமல் பறிக்கப்பார்க்கிறது. இப்படி யாராவது நினைப்பவர்கள் இருந்தால் அவர்களுக்குச் சொல்கிறேன். பேரலைக்குக் கொடுத்தவை திரும்பக் கிடைக்காது. புனர்வாழ்வுக்குக் கொடுத்தவை திரும்பக் கிடைக்கும். திரும்பத் திரும்பக் கிடைக்கும். உங்களுக்கு மட்டுமல்ல உங்கள் தலைமுறைக்கும் உங்கள் தலைமுறைகளைத் தாண்டிய தலைமுறைகளுக்கும் கிடைக்கும்.

ஆம்.... வெற்றியாக, விடுதலையாக அனைவருக்குமான மகிழ்ச்சியாகக் கிடைக்கும் கிடைக்கும். மற்றவர்களுக்கு உதவ நாடுகள் இருக்கின்றன. ஆனால் தமிழர்களுக்கு உதவ உலகத்தமிழர் மட்டுமே இருக்கிறோம்.

நம் தலைவருக்கு எதிரியால் ஏற்பட்ட துன்பத்தை விட, நண்பர்களால் ஏற்பட்ட துன்பமே அதிகம்.

ஆம்... இந்தத் துன்பம் அவரைப் பொறுத்த வரை நண்பனால் ஏற்பட்ட துன்பம்தான்.

ஆம்... அவர்தானே சொன்னார் இயற்கை எனது நண்பன் என்று. எதிரியாக இருந்தால் என்ன? இயற்கையாக இருந்தால் என்ன? நம் தலைவர் அனைத்து சவால்களையும் சமாளிப்பார். நமது தேசத்தை மீளவும் கம்பீரமாக கட்டியெழுப்புவார். உறுதியாக கட்டியெழுப்பு வார். அதற்கு நாம் ஒத்துழைக்க அவர் கரத்தை வலுப்படுத்த அள்ளி அள்ளிக் கொடுப்போம். தொகையாகவும், கொடுப்போம், நகையாகவும் கொடுப்போம்.

(முற்றும்.)

# மீனவர்களின் மீள்கட்டுமானப் பணிக்கு ஜிக்கா நிறுவனம் உதவமுன்வந்துள்ளது

(முல்லைத்தீவு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மீனவர்களுக்கான மீள்கட்டுமானப் பணிகளுக்கு உதவுவதற்கு ஜப்பான் ஜிக்கா நிறுவனப் பிரதிநிதிகள் உறுதியளித்தனர்.

கடந்த 5 ஆம் திகதி முல்லைத்தீவுக்கு வருகை தந்தபோது - முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

முல்லைத்தீவுக்கு வருகைதந்த ஜப்பான் ஜிக்கா நிறுவனப் பிரதிநிதிகள் தமது நிறுவனத்தின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடமைத்தல், மீனவர்களுக்கு உதவுதல் போன்ற திட்டங்களில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அளம்பில் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான திட்டங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்த இவர்கள் - மீனவர்களின் தேவைகள் என்ன என்பதை முல்லைத்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அ.மரியராசாவிடம் கேட்டறிந்தனர்.

மீனவர்கள் தமது தொழிலை மேம்படுத்த சிறிய படகுகள், வலைகள், கடற்தொழில் இயந்திரங்கள் போன்றவை உடனடியாகத் தேவையாகவுள்ளது எனவும், நீண்ட காலத் திட்டத்தில் வலை உற்பத்தித் தொழிற்சாலை, ஐஸ்கட்டித் தொழிற்சாலை என்பன உருவாக்கப்படவேண்டும். அத்துடன் கடற்கரைகளில் வெளிச்ச வீடுகள் அமைத்துத் தருவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர்.

கடற்தொழிலாளர் சமாசத் தலைவரின் வேண்டுகோளுக்கமைய தாம் நடவடிக்கை மேற்கொள்வதாக ஜப்பான் ஜிக்கா நிறுவனத்தினர் உறுதியளித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர், வீடமைப்பு அதிகாரி எனப் பலரும் கலந்துகொண்டனர்.




## சிறுமி காயம்

மன்னார் மதவாச்சி வீதியில் இடம்பெற்ற விபத்தில் - சிறுமி ஒருவர் காயமடைந்த நிலையில் செட்டிக்குளம் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது. மன்னாரிலிருந்து மதவாச்சி நோக்கிச் சென்றுகொண்டிருந்த வாகனம் -செட்டிக்குளம் புகையிரத நிலையத்துக்கு முன்பாக தடம்புரண்டது. இதில் பயணஞ்செய்த சிவமணிகோசலா (வயது 13) என்ற சிறுமியே படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மரம்நாட்டு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மரம் நாட்டுவிழா நாளை நடைபெறவுள்ளது.

வனவளப் பாதுகாப்புப் பிரிவின் அனுசரணையுடன் கிளிநொச்சி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் இந்த மரம் நாட்டும் நிகழ்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தால் பொதிகள்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் வசிக்கும் வடமராட்சி கிழக்கிலுள்ள சகல குடும்பங்களுக்கும் சுகாதாரப் பொதிகள் வழங்கப்பட்டன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல குடும்பங்களுக்கும் சுகாதாரப் பொதிகளைத் தொடர்ச்சியாக வழங்கவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைச் செயலாளர் எஸ்.உதயசூரியன் தெரிவித்தார்.

கனடா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைப் பிரதிநிதிகள், வடமராட்சி கிழக்கு செஞ்சிலுவைச் சங்க பிரிவுப் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த மதுவரித் திணைக்களத்தால் தீவிர முயற்சி!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் அண்மை நாட்களாக அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனை, சட்டவிரோத மதுபான உற்பத்தி என்பவற்றைக் கட்டுப் படுத்தத் தீவிர நடவடிக்கை எடுத்திருப்பதாக வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி றொகான் சஞ்சே ராஜீ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் -


கடந்த ஆண்டு நடைபெற்ற 318 சம்பவங்கள் தொடர்பாகவும், இந்த ஆண்டின் முதல் மூன்று மாதத்தில் இடம்பெற்ற 124 சம்பவங்கள் தொடர்பாகவும் தாம் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஆண்டு கசிப்பு வைத்திருந்தமை தொடர்பாக 55 சம்பவங்களும், ஹெரோயின் வைத்திருந்தமை தொடர்பாக 2 சம்பவங்களும், கஞ்சா வைத்திருந்தமை, விற்பனை செய்தமை தொடர்பாக 25 சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உதவிப்பணம் வழங்கல்

பளை அஞ்சல் அலுவலகத்திலும், அதன் கட்டுப்பாட்டிலுள்ள செம்பியன் பற்று, தாளையடி, ஆழியவளை, முள்ளியான் சுண்டிக்குளம் சோரன் பற்று, இயக்கச்சி முகமாலை உப அஞ்சல் அலுவலகங்களிலும் பொது சன மாதாந்த உதவிப் பணம் மற்றும் காசநோய், புற்றுநோய் உதவிப் பணங்களும் வழங்கப்பட்டுவருகின்றன. (21)



அன்னை பூபதியின் தினத்தை முன்னிட்டு தேசிய மட்ட விளையாட்டுப்போட்டி பரந்தன் இந்து இளைஞர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறுவதைக் காணலாம்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஏப்ரல் - 18

1881: லண்டன் தேசிய வரலாற்று அருங்காட்சியகம் திறந்துவைக்கப்பட்டது

1906:- சான்பிரான்ஸிஸ்கோவில் மிக மோசமான நிலநடுக்கம் ஏற்பட்டது. தொடர்ந்து பல இடங்களிலும் ஏற்பட்ட பெரும் தீ விபத்தினால் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் அழிந்தன. நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர்

1921:- போலந்துக்கும், சோவியத்துக்குமிடையே ரிகா ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இந்த ஒப்பந்தத்தின்படி போலந்து - உக்ரைன் மீது தனக்குள்ள உரிமையை விட்டுக்கொடுத்தது.

1931:- முதன்முதல் காண்ட்ரெல் என்பவரால் டெக்ஸாஸில் - ஃபோர்ட் வொத் எனுமிடத்தில் மின் சக்தியால் இயங்கும் நான்கு சலவை இயந்திரங்கள் கொண்ட ஒரு சலவை நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

1941:- பிரிட்டிஷ் படைகள் ஈராக்கினுள் நுழைந்தன.

1945 :-இரண்டாம் உலக யுத்தத்தின்போது மேற்குப் போர் அரங்கில் ரூர் பகுதியில் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட ஜேர்மனிய படைவீரர்கள் சரணடைந்தனர். இவர்களது தளபதி தற்கொலை செய்துகொண்டார்.

1946:-சர்வதேச சங்கம் கலைக்கப்பட்டது.

1949:- 780 ஆண்டுகால பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலைபெற்ற அயர்லாந்து - அயர்லாந்து குடியரசாக மாறியது.

1951:- நிலக்கரி இரும்பு போன்றவற்றுக்கான கூட்டமைப்பு அமைக்கும் ஒப்பந்தத்தில் இத்தாலி,பிரான்ஸ்,பெல்ஜியம்,மேற்கு ஜேர்மனி, லக்ஸம்போர்க், நெதர்லாந்து ஆகிய நாடுகள் ஒப்பமிட்டன.

1958:- பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

1983:- பெய்ரூட்டில் வெடிமருந்துகளை ஏற்றிவந்த லொறி ஒன்று அமெரிக்க தூதரகக் கட்டடத் தொகுதியுள் புகுந்து தற்கொலைத் தாக்குதல் நடத்தியதில் - தூதரகம் இயங்கிய ஏழுமாடிக் கட்டடம் இடிந்து தரைமட்டமாகியது.

1988:- ஈரானின் எண்ணை நிறுவனங்களையும், எண்ணைத் தாங்கிகளையும் அமெரிக்கா தாக்கியழித்தது.

1995:- சந்திரிகா அரசு - விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட போர் நிறுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

தொகுப்பு - சந்துரு

# கண்டாவளை மகா வித்தியாலயத்தில் சிறுவர் பூங்கா திறந்துவைக்கப்பட்டது

(கிளிநொச்சி)


கிளிநொச்சி - கண்டாவளை மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா திறப்புவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் ச.ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை ஜி.ரி.இசற் நிறுவன இணைப்பாளர் தர்மரட்ணம், கண்டாவளை கிராம சேவையாளர் சண்முகநாதன், பாடசாலைச் செயலாளர் சிறிகணநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியைப் பாடசாலை பிரதி அதிபர் திருமதி பாலேந்திரா ஏற்றிவைத்தார்.

சிறுவர் பூங்காவை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். சிறுவர் பூங்காவின் பெயர்ப்



பலகையை கரைச்சி பிரதேசசபையின் விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்வில் கண்டாவளைப் பிரதேச மக்களால் மனு ஒன்று கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த மனுவில் - கண்டாவளை பிரதேசத்துக்கான வீதிகள், கோயில்களைப் புனரமைத்துத் தருமாறும், பொதுநோக்கு மண்டபம், வைத்தியசாலை ஆகியவற்றைப் புதிதாக அமைத்துத் தரவேண்டும் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை வெகுவிரைவில் மேற்கொள்வதாக அரச அதிபர் உறுதியளித்தார்.

(க)

## தையற்பயிற்சி நெறி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப் பிரதேசத்தில் தையல் பயிற்சிநெறி ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி நாளை காலை 11 மணிக்கு கட்டைக்காடு பொது மண்டபத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியுடன், கிராமிய அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## சிரமதானப்பணி

(கிளிநொச்சி)

அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவையொட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சி தாரணி குடியிருப்புப் பகுதியில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சிரமதானப் பணியில் 50 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் முன்பள்ளி ஆசிரியர்கள், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர், தேசிய எழுச்சிப் பேரவையினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்டனர்.

# கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி

(பரந்தன்)

அன்னை பூபதி தினத்தை முன்னிட்டு, கண்டாவளை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் வின்சன் தலைமையில் தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகள் நேற்று பரந்தன் இந்து இளைஞர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் 13 விளையாட்டு கழகங்களுக்கிடையில் ஆண், பெண் இருபாலாருக்குமான கிளித்தட்டு போட்டி, வலைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள் இடம்பெற்றன. இந்தப் போட்டிகள் தொடர்ந்து மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளன.

இதில் இறுதியாக வெற்றியீட்டும் அணிகளுக்கான இரவுநேர விளையாட்டுப் போட்டிகள் நாளை இடம்பெறவுள்ளதாக கண்டாவளை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

(க)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*ஊழிபெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு*
*ஆழி எனப்படு வார்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## எச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய நேரம்!

பொலநறுவ - சொறிவில் காட்டில் நடைபெற்ற மோதல் சம்பவத்தின் பின்னணிகள் குறித்து ஆராயும்போது, வெளிவரும் செய்திகள் அதிர்ச்சிகரமான உண்மைகளை வெளிப்படுத்துவதுடன், வேறுபல புதிய சந்தேகங்கள் எழவும் காரணமாகியுள்ளது.

இந்த மோதலில் கொல்லப்பட்ட கருணா குழுவின் முக்கியஸ்தர்களுள் ஒருவரான பிரதீப் - கருணாவின் முக்கிய தளபதிகளுள் ஒருவர் என்றும், இதேமோதலில் கொலையுண்ட விஜயன் என்றழைக்கப்படும் ராஜேந்திரன் பேரின்பநாதன் - இந்தியாவினால் உருவாக்கப்பட்டு, இந்த ஆக்கிரமிப்பு இராணுவம் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் நிலைகொண்டு தமிழின அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டபோது, அவர்களுக்கு கூலிப் படையாக இயங்கிய ஈ.என்.டி.எல்.எவ். என்ற இந்தியாவில் தற்போது நிலைகொண்டு இயங்கும் கும்பலின் முக்கிய தளபதிகளில் ஒருவர் என்றும் வெளியாகியுள்ள செய்திகள் புதிய கேள்விகளை எழுப்ப வைத்துள்ளன.

கருணா கும்பலுக்கும் ஈ.என்.டி.எல்.எவ். கும்பலுக்குமான தொடர்புதான் என்ன?

இரு கும்பலின் செயற்பாடுகளின் பின்னணியில் இருப்பதும், அவர்கள்ள நெறிப்படுத்தி இயங்க வைப்பதும் இலங்கை அரசா அல்லது இந்திய அரசா அல்லது இரண்டுமா?

இவர்களின் நோக்கம்தான் என்ன? விடுதலைப் புலிகளை அழிப்பதா? தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைச் சிதைப்பதா? தங்களின் அரசியல் அபிலாஷைகளை இதன்மூலம் நிறைவேற்றிக் கொள்வதா?

தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகளை ஒருங்கிணைத்து தம்மிஷ்டப்படி செயற்பட வைக்கும், இந்திய- இலங்கை அரசுகள், ஒருவருக்கொருவர் எந்த அடிப்படையில் இந்த விடயத்தில் தமக்குள் உடன்பாட்டை மேற்கொண்டுள்ளனர்?

இப்படியான கும்பல்களை போஷித்து, பாதுகாத்து, பயிற்சிகளை வழங்கி, ஆயுதபாணிகளாக்கி இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளின் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ரகசிய முகாம்களை அமைத்துக் கொடுத்து, மக்கள் மத்தியில் வன்முறைகளை மேற்கொள்ளத் தூண்டும் இலங்கை அரசும், இந்திய அரசும், எதனை இலக்குவைத்து செயற்பட முனைகின்றன? ஒரே இலக்கா? வெவ்வேறு உள் நோக்கங்களா?

இந்த அனைத்துக் கேள்விகளும், சந்தேகங்களும், தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தக் கூடும் என்பது ஒருபுறமிருக்க, அதற்குமப்பால் இது குறித்து, அவர்கள் மிக எச்சரிக்கையுடனும், தொலை நோக்குச் சிந்தனையுடனும், செயற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதே முக்கியமானதாகும்.

இது ஒருபுறமிருக்க ஏற்கனவே இலங்கை இனப்பிரச்சினையில் தனது தவறான அணுகுமுறை மற்றும் தொலை நோக்குச் சிந்தனையற்ற மதிப்பீடு காரணமாக, வரலாற்றுச் சிக்கலுக்குள்ளாகி நிற்கும், இந்திய உளவு அமைப்பான 'றோ' தொடர்ந்தும் இந்தியாவின் நற்பெயருக்கும், இலங்கைத் தமிழ் மக்கள் இந்தியா மீது வைத்திருக்கும் மதிப்பார்ந்த நம்பிக்கைக்கும், பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

அதாவது விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் செயற்பாடுகளை மேற்கொள்ள புதிய கட்டமைப்பு ஒன்றினை 'றோ' அமைப்பு உருவாக்கும் முனைப்புடன் செயற்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இந்தக் குழுவுக்குத் தலைமை வகிக்க கடந்த தேர்தலின் பின் - மக்களால் தோற்கடித்து துரத்தப்பட்ட பின் சிங்களப் பேரினவாதிகளின் பிரசாரப் பீரங்கியாகி, தன்னைத் தானே தரமிறக்கிக்கொண்ட ஆனந்தசங்கரியாரைத் தேர்ந்தெடுத்துள்ளதாகவும், செய்திகள் வெளியாகியுள்ளன.

'றோ'வுடன் செயற்பட்ட வரதராஜப் பெருமாள் தலைமறைவு வாழ்வில் முகவரியற்றவராகிவிட்டார்.

டக்ளஸ் தேவானந்தாவை இந்திய அரசும், 'றோ'வும் முழுமையாக நம்புவதாக இல்லை.

இந்த நிலையில் கருணா குழு மீது இந்தியாவின் பார்வை விழுந்துள்ளது போல் தெரிகின்றது.

வரதர் குழு, ஈ.என்.டி.எல்.எவ் கும்பல், கருணா அணி- அனைத்தையும் சங்கரியார் தலைமையில் இயங்க வைக்க 'றோ' முயல்வதாக இணையத்தளச் செய்தியொன்று கூறுகின்றது. வேறுசில தமிழின விரோத அமைப்புக்களும், இதில் இணையக்கூடும் எனவும் தெரியவந்துள்ளது.

இது சர்வதேச சமாதான முயற்சிகளுக்கு சவால்விடும் வகையில் இந்திய - இலங்கை அரசுகள் மேற்கொள்ள முயலும், ஒரு நாசகார சதியாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதனை சமாதான முயற்சிகளை வலியுறுத்தும் நாடுகள், சரியான முறையில் கவனத்தில் கொள்ளாவிடில், சமாதானத்தின் தோல்விக்கு, அவர்களே பொறுப்பேற்க நேரிடும் என்பதை சொல்லிவைப்பதும், தவிர்க்கமுடியாததாகியுள்ளது.

# நாடும் நடப்பும்

செய்தி : சொறிவில் பிரதேச தாக்குதலுக்கு
உள் முரண்பாடே காரணம்
எனச் சந்தேகிக்கப்படுகிறது.



'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# சொறிபவர்களால் ஏற்பட்டது சொறிவில் காட்டுச் சம்பவம்!

கேடுவரும்போது மதிகெட்டுவரும் முன்னே என்பார்கள். நாட்டில் மதிப்போடும் மரியாதையோடும் இருந்தவர் துர்ப் புத்தியைக் கேட்டுப் பேராசை கொண்டார். பிரதேச வாதத்தைக் கிளப்பினார். அப்பாவிப் பொதுமக்கள் பலரைக் கொள்ளையடித்தார், கொலை செய்தார், கோடரிக்காம்பாக மா[illegible]னார். இன்று தலை மறைவாக அஞ்சி அஞ்சி இருக்குமிடம் தெரிய[illegible]ல் தம்மை நம்பியர்வளையும் பலி கொடுத்துத் திரிகிறார். இவர் என்ன சாதித்தார்? கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய முன்வராதது மட்டுமல்ல, அவர்களுக்கு உதவி கிடைக்க முடியாமலும் தடையாக இருக்கிறார். ஊரைக் கொள்ளையடித்து ஓடிப்போனவர்களும்கூட இன்று இவர் பெயரில் மீண்டும் இங்கு திரும்பி ஆதிக்க சக்திகளின் உதவியுடன் விடுதலைக்குக் குந்தகம் செய்வதற்குக் கூட்டுச் சேர்ந் திருக்கிறார்கள். இந்தக் கூடா நட்பு ஆபத்தானதென்பதை சொறிவில் காட்டுப் பகுதிச் சம்பவம் எடுத்துக் காட்டியிருக்கிறது என்று சொல்லியபடியே வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதுபோல் எங்களுக்கும் அவர்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை இது அவர்களுக்குள் உள்ள மோதல் என்று ஸ்ரீலங்கா புலனாய்வுத் துறையும் இராணுவமும், அரசும் இப்பொழுதும்கூடச் சொல்லி வருகிறது. ஆனால் சொறிவில் காட்டுப் பகுதியில் நடந்த சம்பவம் இராணுவக் கட்டுப்பகுதியில்தான் நடந்திருக்கிறது. ஸ்ரீலங்கா பொலிஸ்தான் இதுபற்றி விசாரணை செய்து கொண்டிருக்கிறது. ஸ்ரீலங்கா நீதிபதிதான் இந்த இடத்தைப் பார்வையிட்டு விசாரணை செய்தார். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணு வத்தின் அனுமதியில்லாமல் எவரும் நுழையமுடியாது. சாதாரண இராணுவ முகாம் பகுதியிலேயே அனுமதியின்றி உள்நுழைப வர்கள் தண்டிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டிருப்பது நடைமுறை. இந்த நிலையில் காட்டுப் பகுதியில் பாதுகாப்புக்காக இரா ணுவம் முகாமிட்டிருக்கும் இடத்தில் அவர்கள் அனுமதியில்லா மல் எவரும் நுழையமுடியுமா? என்றேன்.

இதில் இன்னொரு வேடிக்கை இங்கு வந்திருந்த அமைதிப் படையென்ற இந்திய இராணுவத்தின் பாதுகாப்பிலேயெ இருந்து தங்களது தமிழர் தேசிய இராணுவத்துக்கு இளைஞர்களையும் சிறுவர்களையும் வலுக்கட்டாயமாகப் பிடித்து இழுத்துப் பிள்ளை பிடிகாரர் என்று தமிழப் பொதுமக்களால் பட்டம் கட்டப்பட்ட வர்களில் இந்தியப் படையுடனேயே பாதுகாப்புடன் பின்னர் போனவர்கள் சிலரும் சொறிவில் காட்டுச் சம்பவத்தில் மாட்டியிருக்கிறர்கள். இந்தியாவில்இவர்கள் இன்னமும் தங்கியிருப்பதாகவே பதிவிருக்கவேண்டும். இவர்களில் ஒருவர் இந்தியக் குடியுரிமையும் பெற்றிருந்தவராம். இந்திய அகதி முகாமிலிருந்து தப்பிச் செல்வதென்பது சுலபமல்ல. கியூ பிரிவு பொலிஸார் எந்த நேரமும் கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டிருப்பர். இப்படியான நிலையிலும் இந்தியப் பாது காப்பிலிருந்த ஈ.என்.டி.எல்.எவ் என்ற குழுவைச் சேர்ந்தவர்கள் சொறிவில் காட்டுப் பகுதியில் கோடரிக் காம்பைச் சேர்ந்தவர்களுடன் ஒரே முகாமில் கூட்டுச் சேர்ந்திருந்தார்களானால் இது சிறிய விடயமல்ல. இந்திய உளவுப் பிரிவும் சிறிலங்கா புலனாய்வுப் பிரிவும் ஒன்றும் தெரியாத பாப்பாக்களைக் கொண்டவையல்ல. இவைகள் நெருங்கிய தொடர்பு கொண்டு செயற்படுகின்றன என்றே சொல்லவேண்டும். கோடரிக்காம்பின் செயற்பாடுகளுக்கும் இந்த உளவுப் படைகள் வழிகாட்டி களாகவும் இருக்கலாம் என்றார் பரமசிவம்.

புலனாய்வுப் பிரிவு அது பெரிய வல்லரசு நாடுகளிலென் றாலும் சரி சிறிய நாடுகளிலென்றாலும் சரி எந்த இடத்திலாவது மூக்கை நுழைத்து நோண்டாமல் தோண்டாமல் அமைதியாக இருந்ததாக வரலாறே இல்லை! அமெரிக்காவில் சி.ஐ.ஏ, ரஷ் யாவில் கே.ஜி.பி. என்ற இந்த அமைப்புக்களால் அங்கு எத்தனை அரசாங்கங்கள் ஆட்டம் காணநேரிட்டன என்றேன்.

இங்கும் புலனாய்வுப் பிரிவினரால் ஆட்சியாளர்களுக்கு உதவியைவிட உபத்திரவம்தான் கூட என்றார் பரமசிவம்.

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும். இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும். சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தன்னாலான சகல உதவிகளையும் வழங்கக் காத்திருக்கிறது என்று இந்தியத் தலைவர்கள் கூறிவருகிறார்கள். இலங்கையில் அமைதி நிலவவேண்டும் என்பதே தங்கள் விருப்பம் என்றும் அவர்கள் தொடர்ந்து சொல்லிவருகிறார்கள். ஆனால் அங்குள்ள உளவுப் பிரிவும் இங்குள்ள புலனாய்வுப் பிரிவும் இங்கு அமைதி நிலவுவதற்கு உதவமாட்டா போலிருக்கிறதே என்றேன்.

நான்தான் முன்பே சொன்னேனே இந்த உளவு, புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எங்காவது மூக்கை நுழைத்து நோண்டாமல் தோண்டாமலிருக்கமாட்டார்கள், சொறியாமலு மிருக்கமாட்டார்கள். இது அவர்களின் பிறவிக்குணம். இது மட்டுமல்ல உலக நாடுகளிலுள்ள உளவுப் படைகள் வெளிநாடுகளின் விவகாரங்களில் தலையிடக் கூடாது. எந்த நாட்டுத் தூதரகங்களிலும் அந்த நாட்டின் உளவுப் படைப் பிரதிநிதிகள் கடமைக்கு அமர்த்தக்கூடாது என்று பொதுவான சட்டம் கொண்டுவரப்பட்டால், உலகில் அமைதியேற்படுமென்று சொல்லலாமென்றார் பரமசிவம்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இன்னமும் தொடர்வதால் இலங்கையுடன் இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் செய்தேயாகவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயராம் ஜெயலலிதா சொல்லியிருக்கிறார் கவனித் தீரா? என்றேன்.

பாவம் ஜெயலலிதா, சில விடயங்கள் அவருக்கு விளங்குவதில்லை. தமிழ் நாட்டில் ஈ.என்.டி.எல்.எவ்., ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற சில பெயர்களில் யாரும் எங்காவது நடமாடுவதாக கியூ பிரிவு தகவல் கொடுத்தாலும் அவருக்கு எல்லோருமே புலிகளாகத்தான் தெரியும். சோனியாகாந்தி புலிகளை மறந்தாலும் ஜெயலலிதாவால் மறக்க முடிவதில்லை. ராஜிவ் காந்தியின் ஆதரவை அவரால் மறக்கமுடியாததே இதற்குக் காரணம். தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தொடர்கிறது என்று கூறும் ஜெயலலிதா தமிழகத்தில் வைத்துப் பாதுகாக்கும் தமிழ் தேசவிரோதிகள் அங்கிருந்து தமிழீழத்தின் அமைதியைக் குலைப்பதற்கும் இங்கு கொலைகளையும் கொள்ளைகளையும் நடத்துவதற்கும் காரணமாக இருக்கிறார்களென்பதை அவரால் ஏன் புரிந்துகொள்ளமுடிவதில்லை? தமிழகத்தில் இந்த சக்திகளுக்கு பாதுகாப்பளிப்பதை நிறுத்திவிட்டு அவர்களின் தேசவிரோத செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தால் தமிழகமும் நிம்மதியாக இருக்கும் என்றார் பரமசிவம்.

சொறிவில் காட்டுப் பகுதிச் சம்பவம் சரியான முறையில் கண்காணிப்புக் குழுவினால் விசாரணை செய்யப்படவேண்டும். இதற்கு அரசும் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும். இதில் சர்வதேச விசாரணைக் குழுவொன்று நியமித்து விசாரணை செய்தால்கூடப் பல உண்மைகள் அம்பலமாகும் என்று கூறியபடி பரமசிவம் எழுந்தார்.

✿ ✿ ✿ ✿

கனடாவில் புதிய இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்ட இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் சந்திரானந்த டிசில்வாவை கனேடிய அரசு ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாக ஒரு ஊடகச் செய்தி தெரிவிக்கிறது. மனித உரிமைகள் தொடர்பாக சந்திரானந்த டிசில்வா குற்றம் இழைத்திருப்பதாகவும், இதனால் இவரது நியமனத்தை கனேடிய அரசு ஏற்கமறுத்துவிட்டதாகவும் அந்தச் செய்தி தெரிவிக்கிறது என்று சொன்னேன்.

ஒருநாட்டில் ஒருவரைத் தூதுவராக நியமிப்பதென்றால் அவர் பற்றிய பலமான பரிசோதனைகள் விசாரணைகளின் பின்னரே நியமிப்பது வழக்கம். இப்படித் தெரிவு செய்து அனுப்பியவரின் நியமனத்தை அந்தநாடு நிராகரிப்பதாக இருந்தால், அது இந்த நாட்டின் முகத்தில் அறைந்தமாதியிருக்கும். கடற்கோளின்பின் இலங்கைக்கு வந்த கனேடியப் பிரதமர் தமிழர் தாயகத்துக்குச் செல்வது தடுக்கப்பட்டது மட்டுமல்ல, கனடாவுக்கு அறிவுரை கூறும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் இனவாத ஊடகங் கள் விடுதலைப் புலிகளை கனடா தடைசெய்யவேண்டுமென்று வற்புறுத்தியது. ஆனந்த சங்கரியைக் கனடாப் பிரதமர் சந்தித்துப் பேசினால் போதும், வன்னிக்குச் செல்ல வேண்டியதில்லையென் றும் எழுதியது. கனடாவை ஒரு கிள்ளுக்கீரை மாதிரியும், கொழும்பு ஊடகங்கள் எழுதின. அரச தரப்பிலிருந்தும் கனேடிய நாடாளுமன்றத் தூதுக் குழுவினருக்குப் பெரும் வரவேற்புத் தெரிவித்ததாக இல்லை.

கனடாவில் விடுதலைப் புலிகள் தங்கள் செல்வாக்கை வளர்த்துள்ளார்களென்றும், தமிழ் வாக்குகளால் பிரதமர் தங்கியிருப்பதாகவும் ஊடகங்கள் எழுதின.

இப்பொழுதும் சந்திரானந்த டிசில்வா நியமனத்தை கனேடிய அரசு நிராகரித்ததுக்குப் புலிகளே காரணமென்று ஊடகங்கள் சில கூறுகின்றன என்று சொன்ன பரமசிவம் இதுவே புலிகளுக்கு வெற்றிதானே என்று நடந்தார்.

நினைவுக் கட்டுரை

விஜேந்திரன்

# தமிழீழ வரலாற்றில் நீங்காத இடம் பிடித்த அன்னை பூபதி



தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே பல ஒப்பந்த தியாகங்கள் மேற்கொள்ளப்பட்டன. தியாக முன்னெடுப்புக்களின் உத்வேகம் கரும்புலித் தாக்குதலாக மாறியமையால், இலங்கை இராணுவத்தினர் மட்டுமன்றி அரச ஆட்சிப் பீடமே கதி கலங்கியது. விடுதலைப் போராட்டத்தின் வடிவத்தில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தி , புது வேகத்தை பிரதிபலித்தவர் கரும்புலி கப்டன் மில்லராவார்.

தாயக விடுதலைக்காக தங்களை எந்த வகையிலும் அர்ப்பணிக்கத் தயாராகவுள்ளனர் போராளிகள் என்பதை வேறு ஒரு கோணத்தில் புதிய அத்தியாயத்தை ஆரம்பித்தவர் தியாக தீபம் லெப்ரினண்ட் கேணல் - திலீபன். திலீபனது அகிம்சைப் போராட்டத்துடன் விடுதலைப் போராட்டம் மக்கள் மயப்படுத்தப்பட்டதாக விடுதலைக்கான மக்கள் போராட்டங்கள் முனைப்புப் பெற்றன.

எழுச்சி கொண்ட மக்களின் போராட்டங்களைத் தடுப்பதிலும், கைதுசெய்து சித்திரவதை செய்வதும், படுகொலை செய்வதும், கைதுசெய்யப்படுவோர் காணாமல் போவதும் எனப் பல்வேறு வகையான கையாலாகாத்தனங்களை இலங்கை இராணுவத்தினர் மட்டு மன்றி, இந்திய அமைதிப்படையினரும் மேற்கொண்டனர். தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக ஈழமண்ணில் கால்வைத்தது இந்திய இராணுவம். ஆனால் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் - மக்களின் எதிர்பார்ப்புக்களை காலில் போட்டுமிதித்ததுடன், போராட்டத்தையும் கொச் சைப்படுத்தினர்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக காத்திரமான மக்கள் போராட்டங்கள் இடம் பெற்றன. இந்தப் போராட்டங்களின் கனதியை உணர மறுத்த படையினருக்கும், அவர்களது கைப்பொம்மைகளாக செயற்பட்டு வந்த தமிழ் தேசவிரோத குழுக்களுக்கும் எதிராக அன்னை பூபதி தியாகப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

அன்னை பூபதி தனது தாயக உணர்வையும், தமிழ் இனத்தின் மீதும், விடுதலையின் மீதும், கொண்ட தாராள பற்றுணர்வையும் நிலை நிறுத்தி ஆக்கிரமிப்பாளர்களின் ஆதிக்க வெறியை அடக்க உண்ணாவிரதப்' போராட்டத்தை ஆரம்பித்தார்.

இந்திய அரசின் கபடத்தனத்தையும், போலி முகத்திரையைக் கிழிக்கும் நோக்கில் அன்னை பூபதி புனித அகிம்சைப் போர் ஆரம்பமாகியது. தமிழீழ பாரம்பரியத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ள அன்னை பூபதி வீரத்தாய் மட்டுமன்றி, விடுதலைத் தாயாகி இன்றைக்கு பதினேழு ஆண்டுகள் கடந்துள்ளது. இந்தியப் படைகள் ஈழ மண்ணில் செய்த அட்டூழியம் அடாவடித்தனங்களுக்கு எதிராக இந்திய அரசிடம் நியாயம் கோரி, உண்ணா நோன்பிருந்தார் அன்னை பூபதி.

தென் தமிழீழத்தில் ஆக்கிரமிப்பாளர்களும், தேசவிரோதக் குழுக்களும் தனியே மனித வேட்டையுடன் நிறுத்திக் கொள்ளவில்லை.

இளைஞர் யுவதிகளைக் கடத்தல், படுகொலைகள், சித்திரவதைகள், காரணமின்றிய கைதுகள் தொடர்ச்சியாக இடம் பெற்றன. தமிழர்களினது உடைமைகள், வாழ்விடங்கள் என்ற காரணத்துக்காக பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்கள், பொது இடங்கள், குடிமனைகள், தோட்டம், வயல்கள் என எவையும் மிஞ்சவில்லை. கோரப்பிடிக்குள் சிக்கித்தவித்த தென் தமிழீழத்தை இந்தத் துன்பங்கள் வெகுவாக வாட்டி வதைத்தன.

மருதமும் நெய்தலும் சார்ந்த மட்டக்களப்பின் கிரான் என்றகிரா மத்தில் வாழ்ந்த கணபதிப்பிள்ளை பூபதி தனது 56 வயதில் புனிதப் போரை ஆரம்பித்தார். தமிழர் தம் நீண்ட வரலாற்றில் நீங்காது நிலைத்திருக்கும் அன்னை பூபதி - இந்திய வல்லாதிக்க சக்திகளுக்கு எதிராக இரண்டு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து அகிம்சைப் போரை ஆரம்பிக்கத் தயாரானார்.

அமைதிகாக்க வந்த இந்தியப்படை அதற்கு மாறாக தமிழீழத்தில் செய்து வரும் மனித வேட்டைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும். நாட்டில் சாந்தி, சமாதானம் ஏற்பட்டு சுமூக நிலை தோன்ற தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சு வார்த்தைக்கு அழைத்து தீர்வுகாண வேண்டும். என்ற இரு கோரிக்கைகளுடன் 1988-03-19 காலை 10.45 மணிக்கு புனித அகிம்சைப் போர் தொடங் கியது.

இதிகாசப் புராணத்தில் மாணிக்க வாசகர் சுவாமிகளுக்கு இறைவனே குருவாக வந்து ஞானோபதேச தீட்சை கொடுத்தது திருப்பெருந்துறையிலுள்ள ஒரு குருந்த மரத்தடியில் இவ்வாறான இதிகாச சிறப்பு பெற்ற குருந்த மரம் அன்னையின் போராட்டத்திலும் பங்கு கொள்கிறது.

இதிகாச புகழ்பூத்த அமிர்தகழி சிறிமாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்றலில் உள்ள குருந்த மரத்தின் கீழே அன்னையின் போராட்டத்துக்கான மேடையும் அமைக்கப்பட்டது.

இன்றைக்கு 17 ஆண்டுகளுக்கு முன் ஆக்கிரமிப்பாளர்களின் அராஜக அடாவடித்தனங்கள் தலை தூக்கின. இதில் அன்னையின் மகன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமையும், இன்னொருவர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாகியமையும் குறிப்பிட வேண்டியது.

முழு முதல் கடவுளாம் கணபதியின் முன் சர்வமத வழிபாடுகளுடன் திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தின் மத்தியில் போராட்டத்தை ஆரம்பித்தார். மட்டக்களப்பு அன்னையர் முன்னணி - இளைஞர், யுவதிகள், மாணவர்கள் என அனைவரும் அன்னையின் தியாகப் போராட்டத்துக்கு பல்வேறு ஆதரவுகளை வழங்கியதுடன், சுழற்சி முறையில் போராட்டங்களையும் நடத்தினர்.

ஆவேசமான கோசங்களைத் தாங்கியவர்களாக பாதாதைகள், சுலோகங்களுடன் ஊர்வலங்கள் அடையாள உண்ணாவிரதப் போராட்டங்களையும் மேற்கொண்டனர்.

தனது முடிவிலும், இலட்சியப் பற்றிலும் மிகத்தெளிவாக இருந்த அன்னை உவகையுடன் தனது போராட்டத் தைத் தொடர்ந்தார். இந்திய இராணுவம் எவ்வளவோ முயற்சித்தும் அன்னையின் தியாகவேள்வி கைவிடப்படவில்லை. வைத்தியர்கள் உறவுக் காரர்களின் ஆலோசனையையும் ஏற்க மறுத்து, தனி மனித சக்தியாக தமிழ்த் தாயின் முதல் தாய் இலக்கை நோக்கியதான தனது போராட்டத்தில் உறுதியாக இருந்தார்.

தாயக விடிவுக்காக தாய் ஒருத்தி தன்னையே தீபமாக்கி ஒளி கொடுக்கிறாள். ஆக்கிரமிப்பாளர்களின் அடாவடித்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு தனது இலட்சியப் போரில் வெற்றி காண்கிறாள். தாயக விடுதலைப் போரில் வீரசாதனை புரிந்து, உயிர் துறந்தவர்களுடன் 19-04-1988 ஆம் ஆண்டு தன்னையும் இணைத்துக் கொள்கிறார்.

அன்னை பூபதி ஒரு தனி மனிதப் பிறவியாகச் சாகவில்லை. தமிழ்த் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னத முடையது. சாவுக்கு அஞ்சாத மனோதிடம் படைத்தவர்கள், எதையும் சாதிக்கும் வல்லமை பெற்றவர்கள் அவர்களே சரித்திரத்தை படைக்கிறார்கள். அன்னையும் ஒரு சரித்திரத்தைப் படைத்தார். ஒரு தனித் துவமான காலத்தால் சாகாத சரித்திரத்தைப் படைத்தார். இவ்வாறு அன்னை பூபதிக்குப் புகழாரம் சூட்டுகிறார் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபா கரன்.

இலட்சியத்தில் சிறிதளவு தளர்வுமின்றி போராடிய அன்னை தமிழீழ வரலாற்றில் தனக்கென ஒரு தனியான இடத்தை வகித்துக் கொண்டார்.

இந்தியப் படையினரதும் அவர்களது அடிவருடிகளினதும் அராஜகத்தை பேரினவாத அரசுகள் மட்டுமன்றி, உலகறியச் செய்த அன்னை பூபதிக்கு தமிழ் மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர். எழுச்சி கொண்ட மக்களாக அன்னையின் இறுதி நிகழ்வுகளில் பெருமளவில் மக்கள் கூட்டம் கலந்து கொண்டது. மட்டக்களப்பு நாவலடிக் கரையோர மைதானத்தில் வீரத் தாயின் புனித உடல் விதைக்கப்பட்டது.

காலத்துக்குக் காலம் விடுதலைப் போராட்டத்துக்கான தடைக்கற்கள் தலைப்பட்டபோதும், அவை அந்தந்தக் காலங்களிலேயே அகற்றப்பட்டன. முதல் தாயின் வாழ்விடத்தில் அடிவருடிகளின் செயற்பாடுகள் கடந்த வருடம் முதல் இடம்பெற்று வருகின்றது. பேரினவாதிகளின் அற்ப சலுகைகளுக்கும், ஆக்கிரமிப்புக்கும் துணை போகும் சக்திகள் கால மாற்றித்தில் களையப்படுமென்பது வரலாற்று உண்மையாகவுள்ளது.

எழுச்சி கொண்ட மக்களின் புரட்சிகரமான போராட்டங்கள் அன்னை பூபதியின் வழியில் பல கோணங்களில் இடம் பெற்று வருகின்றன.

மக்கள் மயப்படுத்தப்பட்ட விடுதலைப் போராட்டத்தை பேரினவாத அரசுகள் மட்டுமன்றி, உலக நாடுகளும் ஆதரித்து நடுநிலைமை வகிக்கும் உயரிய நிலையில் விடுதலைப் போராட்டம் வளர்ந்து இலக்கு நோக்கி நகர்ந்துள்ளது.

# புத்தாண்டு உங்களுக்கு எப்படி?



## இடபராசி

இடபராசி அன்பர்களே! குருவும் ராகுவும் சாதகமாக அமைந்த நிலையில் இந்த ஆண்டு தொடங்குகிறது. மேலும் இது 7 சனிக்கு விடை கொடுக்கும் காலம் என்பதால், சிறப்பாக அமையும். சனி தற்போது உங்கள் ராசிக்கு இரண்டாம் இடத்தில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல என்றாலும், ஜூன் மாதம் 26 ஆம் திகதி மாறிய பின் உங்களுக்கு .எண்ணற்ற நற்பலன்களை கொடுக்கவுள்ளது. சனி பகவான் தற்போதே நன்மை தரவுள்ளார். நிழல் கிரகங்களில் ஒன்றான ராகு 11 ஆம் இடத்தில் இருந்து ஆண்டு முழுவதும் பொருளாதார வளத்தைத் தருவார்.

அதேநேரம் இன்னொரு நிழல் கிரகமான கேது - 5 ஆம் இடத்தில் இருப்பது சிறப்பானது அல்ல. குரு ட வான் ஆண்டின் தொடக்கத்தில் கன்னி ராசியில் இருந்து, நற்பலனை தந்து கொண்டிருக்கிறார். இவரது நற்பலன்கள் செப்ரெம்பர் 19 திகதி வரை நீடிக்கும். அதன் பின் குரு - 6 ஆம் இடத்துக்குச் செல்வது சிறப்பானது அல்ல.

ஆனால் அதன் பின் அவரது 9 ஆம் இடத்து பார்வை மிக சிறப்பாக அமையும். அதன் மூலம் எந்தப் பிரச்சினையையும் எதிர்கொண்டு வெற்றிகரமாக முன்னேற வழி கிடைக்கும்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்க்கும் போது முக்கிய கிரகங்களில் ராகு ஆண்டு முழுவதும் நன்மை தருவார். ஆண்டின் முற்பகுதியில் சனியும், பிற்பகுதியில் குருவும் நற்பலனைக் கொடுப்பார்கள். இது தவிர சூரியன், புதன், செவ்வாய், சுக்கிரன், சந்திரன் ஆகிய கிரங்களும் அவ்வப் போது நற்பலனைத் தருவார்கள். அந்த வகையில் விரிவான பலனைக் காணலாம்.

நீங்கள் இதுவரை சந்தித்த இடர்பாடுகள் அனைத்துக்கும் பிரதிபலனை காண தொடங்குவீர்கள். தொட்டதெல்லாம் பொன்னாகும் காலம். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பொருளாதாரவளம் மேம்படும். மனதில் துணிச்சல் ஏற்படும். தேவையான பொருட்கள் அனைத்தும் வாங்கலாம். ஜூன் 26 ஆம் திகதிக்குப் பிறகு சனியால் மேலும் எண்ணற்ற பலனை அனுபவிக்கலாம். கௌரவம், செல்வாக்கு மேம்படும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவி இடையே இருந்த பிணக்குகள் மறையும். ஜூன் மாதத்துக்குப் பிறகு பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திருமணம் போன்ற சுப நிகழ்வுகள் கைகூடும். செப்ரெம்பர் மாதத் துக்குள் சிலர் புதிய வீடு, மனை வாங்கலாம். வாகன வசதி கிட்டும். ஆண்டின் தொடக்கத்தில் குழந்தைப் பாக்கியம் பெறலாம். கேது சாதகமற்ற இடத்தில் இருப்பதால், பிள்ளைகள் வகையில் உங்களுக்கு எந்த நன்மையும் கிடையாது.

உத்தியோகம் பார்ப்பவர்கள் ஆண்டின் தொடக்கத்தில் கூடுதல் பலனை எதிர்பார்க்கலாம். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். கோரிக்கைகள் நிறைவேறும். பதவி உயர்வு கிடைக்கும். வேலை நிமித்தமாக பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு வேலைப்பளு அதிகரிக்கும். ஆனாலும் உங்கள் செல்வாக்குக்கோ, திறமைக்குகோ எந்த பங்கமும்வராது.

வியாபாரிகள் பிற்போக்கான நிலையில் இருந்து விடுபடுவீர்கள். வருமானம் அதிகரிக்கும். கடந்த ஆண்டுபட்ட கடனை திருப்பிச் செலுத்தலாம். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. உங்களுக்கு பகைவர்களாக இருந்தவர்கள் உங்களை உணர்ந்து, உங்களிடம் சரண் அடைவார்கள். கொடுக்கல், வாங்கல் சிறப்பாக இருக்கும். காய்கறி வியாபாரம், தானிய வியாபாரம், பாத்திர வியாபாரம் முதலியவை நன்கு வளர்ச்சி அடையும். இரும்பு தொடர்பான தொழில் உங்களை வெகுவாக முன்னேற்றும். திருட்டு, களவு, வீண் விரையம் இனி இருக்காது.

கலைஞர்கள் சிறப்பான நிலையில் இருப்பர். புதிய ஒப்பந்தம் கிடைக்கும். ஆண்டின் தொடக்கத்தில் விருது, பாராட்டு போன்றவை கிடைக்கும். அரசியல்வாதிகள், சமூகநல சேவர்கள் எதிர்பார்த்த பலனைக் காணலாம். பொது மக்களிடையே நற்பெயர் கிடைக்கும். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு எதிர்பார்த்த பொறுப்பு கிடைக்காது.

மாணவர்களுக்கு இந்த ஆண்டு சிறப்பானதாக இருக்கும். நல்ல மதிப்பெண் கிடைக்கும். விரும்பிய பாடம் கிடைக்கப்பெறலாம். சிரத்தை எடுத்துப் படிக்க வேண்டியிருக்கும். ஆனாலும் குருவின் பார்வையால் வெற்றி கிடைக்கும்.

விவசாயிகளுக்கு இனி நஷ்டம் என்ற நிலை இருக்காது. நெல், சோளம் கொள்ளு, பழவகைகள் போன்றவற்றில் நல்ல விளைச்சல் கிடைக்கும். ஜூன் மாதத்துக்குப் பிறகு கரும்பு, எள் போன்ற பயிரிலும் கூடுதல் வருமானம் கிடைக்கும். கைத் தொழில் செய்வோர் நிம்மதி அடைவர். சேமிப்பு அதிகரிக்கும். கூலி வேலை செய்வோரும் திருப்திகரமாக வாழ்வர். வழக்கு விவகாரங்கள் சுமாராக இருக்கும்.

பெண்கள் குதூகலமாகக் காணப்படுவர். கணவரின் அன்பு கிடைக்கும். வேலை செய்யும் பெண்களும் அதிக நன்மை கிடைக்கப்பெறுவர். புத்தாடை, அணிகலன்கள், ஆடம்பரப் பொருட்கள் அதிகமாக வாங்குவீர்கள். பிள்ளைகள் உடல் நலனில் சற்று அக்கறை காட்ட வேண்டி இருக்கும். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு சிலர் மனத்தளர்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

*பரிகாரம்* :- இந்த ஆண்டு முழுவதும் நீங்கள் துர்க்கை வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள். இதனால் சிறுசிறு தடைகளையும் உடைத்தெறிந்து நல்ல வளர்ச்சி காண்பீர்கள். ஜூன் மாதம் வரை சனி பகவானுக்கு நல்லெண்ணை தீபம் ஏற்றி வழிபடுங்கள். செப்ரெம்பர் மாதத்துக்கு பிறகு வியாழக்கிழமை தட்சிணா மூர்த்திக்கு அர்ச்சனை செய்யுங்கள்.

### நகரொன்றிலிருந்து வெளியேறக்கோரி

# பெருமளவு ஷியா முஸ்லிம்களை ஈராக் கிளர்ச்சிவாதிகள் கடத்தல்

ஈராக்கின் மத்திய பகுதி நகரான மேடெயினிலுள்ள ஷியா முஸ்லிம்கள் உடனடியாக அந்த நகரைவிட்டு வெளியேற வேண்டுமெனக்கோரி பெருமளவிலான ஷியா முஸ்லிம்களை, சுனி கிளர்ச்சிவாதிகள் கடத்தி வைத்துள்ளதாகவும், இவர்களை மீட்பதற்காக அமெரிக்க மற்றும் ஈராக் படைகள் பெருமெடுப்பிலான மீட்பு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை பெருமளவிலான ஷியா முஸ்லிம்களை கடத்திய கிளர்ச்சிவாதிகள் குறித்த நகரத்தில் வசிக்கும் அனைத்து ஷியா முஸ்லிம்களும் வெளியேற வேண்டுமெனவும், இல்லையெனில் கடத்தி வைத்துள்ள அனைவரும் கொல்லப்படுவரென எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

சுமார் 100 பேரடங்கிய முகமூடி அணிந்த கிளர்ச்சிவாதிகள், குறித்த நகரத்திற்கு கார்களில் வந்து ஷியா முஸ்லிம்களில் இளையவரிலிருந்து முதியோர்வரை பிடித்துச் சென்றதாகவும், ஆனால் எத்தனை பேரை அவர்




கள் பிடித்துச் சென்றார்களென்ற சரியான விபரம் தெரியாதபோதிலும் சுமார் 35 இலிருந்து 100 பேர்வரை பிடிக்கப்பட்டிருக்கலாமெனவும், இஸ்லாமிய புரட்சி அதிகாரசபையின் பேச்சாளர் ஹெயிற்றாம் ஹிசையினி தெரிவித் தார்.

கிளர்ச்சிவாதிகளின் இந்த நடவடிக்கையை அடுத்து சில ஷியா குடும்பங்கள் இந்த நகரிலிருந்து வெளியேறிவிட்டதாக ஏ.ஏப்.பி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இதேவேளை கிளர்ச்சிவாதிகளிடமிருந்து கடத்தப்பட்ட ஷியா முஸ்லிம்களை மீட்க அமெரிக்க மற்றும் ஈராக் படையினர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக ஈராக்கிய பாதுகாப்பு அமைச்சர் காசிம் தாவூத் தெரிவித்தார்.

இதனிடையே பகுபா நகரிலுள்ள உணவு விடுதியொன்றின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இரண்டு பொலிஸார் உட்பட எழுவர் கொல்லப்பட்டதாகவும், ஐவர் காயமடைந்ததாகவும், கேணல் இஸ்மயில் இப்ராகிம் தெரிவித்தார்.

உணவு விடுதியில் மதிய உணவு நேரமே இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுமுன்தினம் புக்கா சிறைச்சாலையிலிருந்து 11 கைதிகள் தப்பிச் சென்றதாகவும், பின்னர் இவர்களில் பத்துப்பேர் மீளவும் பிடிக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தோனேஷிய நியாஸ்தீவில் நேற்றுமுன்தினம் பூமியதிர்ச்சி!

இந்தோனேஷிய தீவுப் பகுதியில் 5 மாதங்களாக தொடர் நிலநடுக்கம் ஏற்பட்டு வருகின்றது. இந்தத் தொடர் நிலநடுக்கத்தால் மக்கள் பீதியில் உறைந்துபோயுள்ளனர். இந்த நிலையில் இந்தோனேஷியாவின் நியாஸ் தீவில் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. வழக்கமான நில அதிர்வுகளைவிட இந்த முறை பூமி அதிர்ச்சி கடுமையாக இருந்தது.

இதனால் தூங்கிக்கொண்டிருந்த மக்கள் வீட்டைவிட்டு வெளியே ஓடினர். டிசெம்பர் 26 ஆம் திகதி போல் இந்தமுறை பூமி பலமாக நடுங்கியதால் மீண்டும் சுனாமி உருவாகுமோ என்ற அச்சத்தில் .கரையோரப்பகுதி மக்கள் இருந்தனர். அவர்க்ள் இரவோடு இரவாக பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

நியாஸ் தீவில் நள்ளிரவு ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1ஆக இருந்தது. டிசெம்பர் 26 ஆம் திகதி சுன ாமி தாக்குதலுக்கு பின் மார்ச் 28 ஆம் திகதி 8.7 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.அதில் 600 பேர் வரை பலியானார்கள்.

ஆனால், நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிர்ச்சேதமோ பொருள் சேதமோ ஏற்படவில்லை. எனினும், சுனாமி பீதியில் மக்கள் மலைச் சிகரங்களின் மீது ஏறி அங்கேயே தங்கியுள்ளனர்.

### சூரியன்,பூமி,சந்திரன்,சனி என்பன

# நேர்கோட்டில் வந்ததாலேயே சுனாமி அனர்த்தம் ஏற்பட்டது!

## ஓய்வுபெற்ற இந்திய விஞ்ஞானி தெரிவிப்பு

சூரியன் ,பூமி ,சந்திரன், சனி ஆகியவை ஒரே நேர்கோட்டில் வந்ததால் கடந்த டிசம்பர் 26 இல் சுனாமி ஏற்பட்டதென ஓய்வுபெற்ற இந்திய விஞ்ஞானி பரமஹம்ச திவாரி கூறியுள்ளார்.

நரோரா மற்றும் கைகா அணு ஆலைகள் அமைக்கப்படுவதை மேற்பார்வையிடும் பணியில் இருந்த திவாரி (விண்வெளி சுழல் கொள்கை) என்னும் சர்ச்சைக்குரிய கொள்கையை வெளியிட்டிருந்தார். இக்கொள்கையை விஞ்ஞானிகள் ஏற்கவில்லை.

டிசம்பர்26 இல்ஏற்பட்ட சுனாமியை புதிய கொள்கையின் அடிப்படையில் திவாரி விளக்கியுள்ளார். திவாரி கூறியதாவது-

விண்வெளியில் தன்னைத்தானே சுற்றும் அனைத்து கோள்களையும் சுற்றி மின்புலம் இருக்கிறது. இது தனது அருகில் வரும்பொருட்களை விலக்கும் பண்பு கொண்டது.

டிசம்பர் 26 ஆம் திகதி சூரியன், பூமி ,சந்திரன் ,சனி ஆகிய கோள்கள் நேர்கோட்டில் இருந்தன. அவற்றின் மின்புலங்கள் ஒன்றையொன்று விலக்கின. சூரியனின் விலக்கும் விசை பூமியின் மீது செயல்பட்டது.

பூமிக்கு மறுபுறம் இருந்த சனியின் மின்புலம் சூரியனின் மின்புலத்தைச் சமன்செய்ய முடியவில்லை. சனிக்கும் ,பூமிக்கும் இடையே சந்திரன் இருந்ததே இதற்குக் காரணம்.

மின்விசையின் சமநிலை மீறப்பட்டதால், சூரியனின் மின்புலம் பூமியை விலக்கும் வகையில் செயல்பட்டது. நிலப்பரப்பு கடினமாக இருந்ததால் அது நகரவில்லை. ஆனால் பூமியின் மேற்பரப்பில் இருந்த கடல் நீர் வேகமாகத் தள்ளப்பட்டது. சுனாமி உருவாகி நிலப்பரப்பில் மோதியது.

சில ஆண்டுகளுக்கு முன் முழு சூரிய கிரகணம் ஏற்பட்டபோது, துருக்கியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. 1883 இல் சனியையும் , பூமியையும் -சந்திரன் கடந்து சென்ற போது கிராகடோவோ எரிமலை வெடித்தது.

கோள்களுக்கு இடையே ஈர்ப்பு விசை தவிர வேறு விசைகள் இல்லை என்பதே அறிவியல் ஏற்கும் கொள்கையாகும். திவாரியின் கொள்கை இயற்கைக்கு முரணானது. விந்தையானது என்று டெல்கி பல்கலைக் கழக விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார்.

தனது கொள்கை சரியென்றால் பூமி ,சூரியன் ,சந்திரன், வியாழன் ஆகிய கோள்கள் நேர்கோட்டில் வரும்போது, மிகப்பெரிய சுனாமி ஏற்படும் எனவும் திவாரி தெரிவித்தார்.

# ஜாவாதீவில் 9 எரிமலைகள் எந்தநேரமும் வெடிக்கலாம்!

(ஜகார்த்தா)

இந்தோனேஷியா, ஜாவா தீவில் ஒன்பது எரிமலைகள் வெடிக்கும் அபாய நிலையிலுள்ளதால், விஞ்ஞானிகள் அவற்றைத் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

இந்தோனேஷியாவில் உள்ள சுமாத்ரா தீவு பூகம்பத்தின் பிடியில் சிக்கியுள்ளது. தினமும் ஒரு பூகம்பமாவது அங்கு தாக்குகிறது. மக்கள் மரண பீதியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். ஏற்கனவே பூகம்பத்தால் பீதி அடைந்துள்ள அவர்களை, எரிமலையின் சீற்றமும் சீண்ட ஆரம்பித்துள்ளது. அடிக்கடி ஏற்படும் பூகம்பத்தால், தூங்கிக்கொண்டிருந்த எரிமலைகள் விழித்துக்கொண்டு விட்டன.

சுமாத்ரா தீவு அருகே, படாங் என்ற இடத்தில் தலாங் மலை உள்ளது. இதில் உள்ள எரிமலை சில தினங்களுக்கு முன் திடீரென சீற்றம் அடைந்து ஆயிரம் மீற்றர் உயரத்துக்கு சூடான சாம்பலைக் கக்கியதுடன் எந்த நேரத்திலும் நெருப்புக் குழம்பை உமிழும் என்றும் எச்சரிக்கப்பட்டது. இதனையடுத்து எரிமலையை சுற்றியுள்ள மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இந்த எரிமலையின் சீற்றம் தற்போது தணிந்துள்ளது. சாம்பல் கக்கும் உயரம் நூறு மீற்றராக குறைந்துவிட்டது. இன்னும் சிலநாட்களில் பழைய நிலைக்குத் திரும்பிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் இன்னும் அபாயகரமான நிலையில் தலாங் எரிமலை இருப்பதாக எரிமலை விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். அதைத் தீவிரமாகக் கண்காணித்தும் வருகின்றனர்.

இது ஒருபுறம் இருக்க, இந்தோனேஷியாவின் ஜாவா தீவில் உள்ள ஒன்பது எரிமலைகள் சீற்றமடையும் நிலையில் உள்ளன. இப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரண்டு பூகம்பங்கள் ஏற்பட்டன. ஐந்து மற்றும் ஆறு ரிக்டர் அளவில் இவை பதிவாகி இருந்தன. பூகம்பங்களின் தாக்கத்தால் எரிமலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளன. இத்தீவில் அதிகளவில் மக்கள் வசிக்கின்றனர். எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

# பாப்பரசர் ஜோன்போலின் மோதிரம் அழிக்கப்பட்டது!

பாப்பரசர் 2ஆம் ஜோன்போல் கடந்த 3 ஆம் திகதி அதிகாலை மரணம் அடைந்தார். 8 ஆம் திகதி அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

115 கர்தினால்கள் சிஸ்டைன் தேவாலயத்தில் பூட்டிய அறைக்குள் ரகசிய வாக்கெடுப்பு நடத்தி இன்று புதிய பாப்பரசரை தேர்ந்தெடுக்கவுள்ளனர்.

கர்தினால்கள் புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக ஏற்கனவே பல தடவை கூடி ஆலோசனை நடத்திவிட்டனர்.

பாப்பரசர் நல்லடக்கம் செய்யப்பட்ட 9 ஆவது நாள் சிறப்பு பிரார்த்தனை கூட்டத்திலும் கர்த்தினால்கள் கலந்து கொண்டனர்.

இந்துப் பிரார்த்தனை கூட்டத்துக்கு பின்னர் பாப்பரசர் கையில் அணிந்திருந்த மோதிரம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி அவர் பயன்படுத்தி வந்த ஈயத்தால் ஆன முத்திரையும் அழிக்கப்பட்டது.

2 ஆம் ஜோன் போலின் 27 ஆண்டு சகாப்தம் முடிந்து விட்டதை



யும் புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கைகள் தொடங்கிவிட்டதையும் குறிக்கும் வகையில் இந்தச் சடங்கு நடைபெற்றது.

ரகசிய வாக்கெடுப்பு நடக்கும் அறையில் ஒட்டுக்கேட்கும் கருவிகள் ஏதாவது உள்ளதா என தொடர்ந்து சோதனை நடைபெற்று வருகிறது. சிஸ்டைன் தேவாலய வளாகத்துக்கு பார்வையாளர்கள் செல்வதற்கும் தேர்தல் முடியும்வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# பங்களாதேஷ் படையினர் சுட்டதில் இந்திய பொலிஸார் ஒருவர் உயிரிழப்பு!

இந்திய-பங்களாதேஷ் எல்லைப் பகுதியில் இரண்டு நாட்டுப்படைகளுக்குமிடையே இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இந்திய எல்லைக் காவல் பொலிஸார் ஒருவர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த இந்திய பொலிஸார் ஜீவன் குமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்திய பொலிஸாரின் தாக்குதலில் பங்களாதேஷில் பெண்ணொருவர் உயிரிழந்ததாக ஏ.பி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இந்தியப் பிரஜை ஒருவர் எல்லைப் பகுதியைத் தாண்டி தமது பகுதிக்குள் வந்ததால் தாம் அவரை தடுத்து வைத்திருந்தவேளை இந்தியப் படையினர். துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக பங்களாதேஷ் படையினர் தெரிவித்தனர்.

ஆனால், குறித்த இந்திய பிரஜை தமது கட்டுப்பாட்டிற்குள் நின்றவேளை ஆயுதம் தாங்கிய பங்களாதேஷ்வாசிகளால் அவர் இழுத்துச் செல்லப்பட்டதாக இந்தியப்படையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இந்தியாவின் எல்லைப்பகுதியான திரிபுராவிலும் பங்களாதேஷின் கொமிலா மாவட்டத்திலும் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக பங்களாதேஷ் தரப்பிலிருந்து எவ்வித கருத்துக்களும் வெளிவரவில்லை.

# ஐரோப்பிய ஒன்றியத்தில் மேலும் இரண்டு நாடுகள்

கிழக்கைரோப்பிய நாடுகளான ரோமானியா மற்றும் பல்கேரியா ஆகிய இருநாடுகளையும் தமது ஒன்றியத்தில் இணைத்துக் கொள்வதற்கு ஐரோப்பிய நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி இந்த இருநாடுகளும் ஐரோப்பிய ஒன்றியத்தில் எதிர்வரும் 2007 ஆம் ஆண்டு இணைத்துக் கொள்ளப்படவுள்ளன. எனினும், இந்த இரு நாடுகளும் ஊழலை தடுத்து விவசாயத் துறைகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்தும் சீர்திருத்தங்களை வேகமாகச் செய்யாவிட்டால் இருநாடுகளுக்குமான உறுப்புரிமை வழங்கப்படுவது ஒரு வருடத்தால் தாமதமாகும்.

எனினும், 23 மில்லியன் மக்களைக் கொண்ட ருமேனியா தமது முன்னேற்றத்திலிருந்து பாரியளவில் பின்தங்கியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் தெரிவித்துள்ளன.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தின் விரிவாக்கல் குழுத் தலைவரான ஒலிறென் இதனை மறுத்ததுடன், ருமேனியா தொடர்பாக எச்சரிக்கை கலந்த நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

புதிய இடது சாரி ருமேனிய அரசாங்கமானது நீதித்துறை மற்றும் ஊழல்களுக்கெதிராக குறிப்பிடத்தக்களவில் சீர்திருத்தத்தை மேற்கொண்டுவருவதாகவும் எனினும், வேகமான சீர்திருத்தத்தை இந்த இரு நாடுகளும் மேற்கொள்ளாதவிடத்து இரு நாடுகளுக்குமான உறுப்புரிமை ஒரு வருடத்தால் தாமதமாகுமெனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளைஅடுத்த ஒன்றரை வருடங்களுக்கு இந்த இரு நாடுகளது நடவடிக்கைகளையும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்து வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சிரியாவுக்கு ஆதரவானவர் லெபனான் பிரதமராக தெரிவு!



சிரியாவிற்கு ஆதரவான லெபனானின் நாடாளுமன்ற உறுப்பினரான நஜீப் மிகாதி லெபனானுக்கான புதிய பிரதமராக அந்நாட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது நாள்வரை காபந்து அமைச்சராக இருந்த பிரதமர் ஓமர் கராமி இரண்டாவது முறையாகவும் அரசாங்கமொன்றை அமைக்கும் முயற்சியில் தோல்விகண்டதை அடுத்தே மிகாதி பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

லெபனானை நவீனமயப்படுத்துவதுடன் தேசிய ஒருமைப்பாட்டுடனும் தமது அரசாங்கம்வைத்திருக்குமென பிரதமராகத் தெரிவான மிகாதி தெரிவித்தார். அத்துடன், லெபனானில் அக்கறையுள்ள சகலருடனும் இணைந்து வெளிப்படையாக செயற்படத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவரது பதவியேற்பு நிகழ்வு அல் ஜசீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது, அதில் தமது அரசாங்கம் வெற்றிகரமாக இயங்குவதற்கு அரசியல்வாதிகள் அனைவரும் தமது வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார். அத்துடன் தமது அரசாங்கம் மூன்று விடயங்களை அடிப்படையாக வைத்து செயற்படவுள்ளதாகவும் அதில் முதலாவது – எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தயாரிப்பு வேலைகளில் ஈடுபடுவது. இரண்டாவது – முன்னாள் பிரதமர் ஹரீரியின் கொலையுடன் தொடர்புடையவர்களைக் கண்டுபிடிப்பது தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு வேண்டிய தகவல்களை வழங்குவது. மூன்றாவது – லெபனானின் பொருளாதாரத்தை வளர்ப்பது. அத்துடன், அயல்நாடுகளுடனான உறவுகளை மேம்படுத்துவது என்பனவே அவையாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பிரதேச செயலர் கொலை சி.ஐ.டி விசாரணையில்!

(கொழும்பு)

திருக்கோவில் பிரதேச செயலாளர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடத்தும் பொறுப்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சி.ஐ.டி) கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்றுக் கொழும்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே பொலிஸ்மா அதிபர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிழக்குப் பிரதேசம் மற்றும் பொலநறுவ ஆகிய இடங்களில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருக்கோவில் பிரதேச செயலர் படுகொலை செய்யப்பட்டது குறித்து விசாரணை செய்வதற்கு அங்கு அதிகாரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை திருக்கோவில் பிரதேச செயலர் ஏ.க.தவராசாவின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன. இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இதேவேளை இவரின் கொலையைக் கண்டித்து விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் அறிக்கைகளை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# பொது வேட்பாளராக மகிந்தவை உடனடியாக நியமிக்க வேண்டும்!

## லங்கா சமசமாஜக் கட்சி கோருகிறது

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டுமென லங்கா சமசமாஜக் கட்சி கோரியுள்ளது.

மாதாந்தம் வெளியிடப்படும் அந்தக் கட்சியின் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான குழுவினர் பொதுவான வேட்பாளரை எவ்வளவு விரைவாகத் தீர்மானிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக தீர்மானிக்க வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியில் உள்ள கட்சிகள் அனைத்தும் விரைவாக கூட்டமொன்றை நடத்தி பிரதமர் ராஜபக்ஷவை முன்னணியின் பொது வேட்பாளராக நியமிக்க வேண்டும். எமது பொது வேட்பாளரை நியமிப்பதற்கு நாம் எவ்வித நேரத்தையும் விரயமாக்கக் கூடாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான தமது வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்கவை அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(01)

# முன்னுக்குப் பின்னர்...

விடுதலைப் புலிகளின் கடந்த 20 வருடகால வரலாற்றை நன்கு அறிந்து வைத்திருப்பவர்கள் - அவர்கள் பின்னடைவுகளைச் சந்திக்கும்போது இவ்வாறான பிரசாரங்களில் ஈடுபடுவதை வழமையாகக் கொண்டிருந்ததை அறிவர்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் உட்பூசல்கள் இருக்கின்றன. இந்த நிலையிலேயே இவ்வாறான போலிப் பிரசாரங்களை அவர்கள் மேற்கொண்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை - இராணுவத் தலைமையகத்தால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ களநிலை அறிக்கையில் -

அடையாளம் தெரியாத விமானம் ஒன்று புலிகளின் கிளாலி கடல்நீரேரிக்கு மேலாகப் பறந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றதாகக் கூறப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் காலை - புலிகளின் முன்னணி காவலரண்களுக்குப் பின்புறமாக சுமார் ஒரு மணிநேரமாக - ஆட்லறி, மோட்டார் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டதாகவும் -

இதைத் தொடர்ந்தே புலிகளின் விமானம் எனச் சந்தேகிக்கத்தக்கதொரு விமானம் - குடாக்கடலுக்கு மேலாகப் பறந்து - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று மறைந்ததாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் குறித்து இராணுவத் தரப்பு முன்னுக்குப் பின் முரணான் செய்திகளை வெளியிட்டிருக்கும் அதேவேளை -

விமானப்படைத்தளபதிஎயர்வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா - வடபகுதியில் விடுதலைப் புலிகளின் விமான நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானிக்கும்படி விமானப்படையினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

புலிகளின் விமானம் பறந்தது பற்றிய செய்தி 12 மணி நேரத்துககுப் பின்னரே தமக்குக் கிடைத்ததால் - விமானப்படை மேலதிக விசாரணைகளிலோ அல்லது தேடுதல் நடவடிக்கைகளிலோ ஈடுபடமுடியாமற்போனதாகத் தெரிவித்தார்.

யாழ். நகரில் O/L DAY CLASS இற்கு நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஒரே நிறுவனம்
நாவலர் இன்ஸ்ரிரியூட் ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்
O/L DAY CLASS
பிரிவு - I ஆரம்பமாகி விட்டன
பிரிவு -II ஆரம்பம் : 20.04.2005 புதன் 8.30 - 2.30
குறிப்பு :
கணித வகுப்பு மாதத்தில் 30 மணித்தியாலங்கள் நடைபெறும்.
கணித பாடம் சித்தியடையாதவர்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் மேலதிக இலவச வகுப்பு.
(சி-4059)

# இவ்வாண்டு இறுதிக்குள்

# எந்தத் தேர்தல் நடத்தினாலும் ஐ.தே.கவே ஆட்சியமைக்கும்!

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர் நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் அல்லது நாடாளுமன்றத் தேர்தல் இல்லையெனில் கருத்துக் கணிப்பு என்பவற்றில் ஒன்று இடம் பெறுமென ஐ.தே.கட்சியின் பிரதிச் செயலாளரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

உடுதும்பர தேர்தல் தொகுதியில் மின் விநியோகத்தை நீடிப்பது தொடர்பான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

பொதுமக்கள ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி ஆகியன இணைந்து இந்த நாட்டை 11 வருடங்கள் ஆட்சி செய்து ஊழலையே அதிகரித்துள்ளனர். எவ்வகையான தேர்தல் நடைபெறுமாக இருந்தாலும் தற்போதைய அரசாங்கம் பொதுமக்களின் ஆதரவை இழக்கும். ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வரும்.

சுனமியால் பாதிக்கப்பட்ட மக்கள் இதுவரை முகாம்களில் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். ஆனால், இந்த மக்களுக்கான வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் தொலைக்காட்சிகள் மூலம் பிரசாரம் செய்து வருகின்றது.

எனினும், இந்தப் பணிகளுக்கு சர்வதேச சமூகத்தால் வழங்கப்பட்ட பல மில்லியன் ரூபாய் மூலம் அரசாங்கம் எவ்வித செயற்பாட்டையும் மேற்கொள்ளவில்லை. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் தமது வீடுகளை மட்டும் இழக்கவில்லை. மாறாக தமது வாழ்க்கையையே தொலைத்துள்ளனர்.

அரசாங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித உதவிகளையும் வழங்காததை எதிர்த்து அனைத்து மக்களையும் இணைத்து ஐ.தே.கட்சி தெற்கில் ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளது.

அரசாங்க வேலைவாய்ப்புகளில் ஊழல் இடம்பெற்றால் அதனைத் தடுப்போமென கூறும் ஜே.வி.பியினர் - எவ்வித தகுதியுமில்லாதவர்களிடம் லஞ்சம் பெற்று வேலை வாய்ப்புக்களை வழங்கி வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

## பிரதி இராஜா...

முன்னெடுப்புக்கள் தொடர்பாக இருவரும் கலந்துரையாடுவரெனவும் தெரிவிக் கப்படுகிறது.

கொழும்பிலுள்ள அமெரிக்க நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நூலகத்தையும் கிறிஸ்டினா றொக்கா உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளதாகவும் அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளை, நாளை கல்முனைக்குச் செல்லவுள்ள கிறிஸ்டினா றொக்கா யு.எஸ்.எய்டின் நிதியுதவியுடன் அப்பகுதியில் மேற் கொள்ளப்படும் புனரமைப்புப் பணிகளையும் நேரில் பார்வையிடவுள் ளார்.

யு.எஸ்.எய்ட் நிறுவனத்துடன் இணைந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளையும் இவர் சந்தித்து பேசவுள்ளார்.

இவர் தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் இராஜாங்க செயலாளராக கடந்த 2001 ஆண்டில் நியமிக்கப்பட்டதி லிருந்து மூன்று தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கட்டமைப்பை...

இடைக்கால அதிகாரவரைவு என்பது எமது அதிகாரங்களை முற்று முழுதாக விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதாகும். பொதுக் கட்டமைப்பு என்பது இரண்டு தரப்பினருக்கும் சம அளவு அதிகாரத்தை வழங்குவதாகும். எனவே, பொதுக்கட்டமைப்பை நாம் நிராகரிப்பதன் மூலம் சர்வதேச ரீதியில் அவர்கள் எம்மை விமர்சிப்பார்கள். சர்வதேச ரீதியில் இலாபத்தைப் பெற்றுக்கொள்வார்கள். இதனை நாம் கட்டாயம் நிராகரிக்கக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## 1300 பேருக்கு...

இதற்கமைய பரீட்சைத் திணைக்களம் மேற்படி வேலை வாய்ப்புக்கு பொருத்தமான நபர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சையை நடத்தியுள்ளது. பரீட்சை முடிவுகள் மிக விரைவில் வெளியாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## பொதுக்கட்ட...

எதிர்வரும் மே முதலாம் திகதி கண்டியில் - உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில், அதற்கு முன்னர் இந்த முடிவுகளை ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தம்புள்ளவில் பறக்கவிடப்பட்ட பலூன் விபத்துக்குள்ளானது!

## பலர் காயமடைந்தனர்

தம்புள்ளவிலுள்ள ஹொட்டல் ஒன்றின் ஏற்பாட்டில் உல்லாசப் பயணிகளுக்காக பறக்க விடப்பட்ட பலூன்- தொழில்நுட்பக் கோளாறினால் தரையில் வீழ்ந்ததில் பலர் காயமடைந்தனர்.

இந்த பலூன் வீதியால் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்றின் மீது விழுந்தது. இதனால் வாகனம் சேதமடைந்தது.

தம்புள்ள பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கு முன்னரும் இந்தக் ஹொட்டல் ஏற்பாட்டில் உல்லாசப் பயணிகளைத் தாங்கிச் சென்ற பலூன் பண்ணையொன்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதும் குறிப்பிடத்தக்கது.

# ஈ.என்.டி.எல்.எவ்வினரின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு ஆனந்தசங்கரி முயற்சி?

(கொழும்பு)

பொலனறுவ மாவட்டத்திலுள்ள அரலகன்வில - சொறிவில் காட்டுப் பகுதியில் கருணாவின் சகாக்கள் தங்கியிருந்த முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த ஈ.என்.டி.எல்.எவ். உறுப்பினரின் சடலங்களை மீட்டு அடக்கம் செய்யும் முயற்சியில் ஆனந்தசங்கரி ஈடுபட்டிருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னர் இந்தியப் படையினருடன் துணைப்படையாக இயங்கி, இலங்கைப் படையினருடன் துணைப் படையாகச் செயற்பட்ட - இந்தியக் குடியுரிமை பெற்றவர்களான - விஜயன் எனப்படும் இராசேந்திரன் பேரின்பநாதன், கபி எனப்படும் செல்லையா குழந்தைவேலு ஆகியோரின் சடலங்களையே இந்தியத் தூதரக உத்தரவுடன் அடக்கம் செய்யும் பொறுப்பை ஆனந்தசங்கரி ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் -

இது தொடர்பாக ஈ.என்.டி.எல்.எவ். தலைவர் பரந்தன் ராஜன் தொலைபேசியூடாக ஆனந்தசங்கரியுடன் பேசியுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

# சமாதான முயற்சிகளில்...

தூதுவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

நோர்வே அரசாங்கம் இலங்கையின் சமாதான செயற்பாட்டில் ஏற்பாட்டாளர்களாக இருப்பதை அனைவரும் அறிந்ததே. தற்போது தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய இனங்களைச் சேர்ந்தவர்கள் நெருக்கடியான நிலையிலுள்ளனர். இவை அனைத்தையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். விசேடமாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளில் முஸ்லிம் மக்கள் அனுபவிக்கும் துயரம் எமக்குத் தெரியும்.

இந்த விடயம் தொடர்பாக முடிந்த வரை நாம் நடவடிக்கை எடுப்போம். முழுமையாகச் சமாதான முயற்சியில் கவனம்செலுத்தும்போது - முஸ்லிம் மக்களின் துயரமும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும். பாதிக்கப்பட்ட மக்களை உரிய பாதுகாப்புடன் முன்னைய இடங்களில் குடியமர்த்த வேண்டும் என்பதும், எமக்குத் தெரியும்.

மேற்கூறிய அனைத்துக்கும் தீர்வு காண வேண்டுமாயின் சமாதானத்துடன் தொடர்புடைய இரண்டு தரப்பினரையும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 12.15 மணியளவில் இலங்கை வந்தடைந்த நோர்வே விசேட தூதுவர் - அரச தரப்பினரையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார். இந்தச் சந்திப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதேவேளை, சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக ஏற்படும் நெருக்கடிகள் குறித்து வலுவாக ஆராய்வார். இவர் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் எனவும் நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

பருத்தித்துறைவீதி, DCM யாழ்ப்பாணம்
O/L DAY CLASS
விஞ்ஞானம் - இரா.செல்வவடிவேல்
கணிதம் - எஸ்.செந்தூரன்
ஏனைய பாடங்களும் பிரபல ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்
ஆரம்பம் : 20.04.2005 புதன் 8.30 (பு.நேரம்)
(சி-4059)
குறிப்பு : கணிதம் வாரத்தில் 10 மணித்தியாலம் கற்பிக்கப்படும். (மாதத்தில் 40 மணித்தியாலம்)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 2005 ஏப்ரல்

ஆசிரியர்:
M.பிரகாஸ்

## அளவையியலும் விஞ்ஞானமுறையும் - I

மூன்று மணித்தியாலம்
Three hours

இவ்வினாத்தாளில் பயன்படுத்தப்படும் தருக்க மாறிலிகள் பின்வருமாறு:

Note :- உட்குடை: $\rightarrow$ இணைப்பு: $\wedge$ உறழ்வு: $\vee$ இரட்டை நிபந்தனை: $\leftrightarrow$ பரீட்சார்த்திகள் இவற்றைத் தவிர பிற மாறிலிகளைப் பயன்படுத்தலாகாது. தேற்றங்களை நிறுவவேண்டி இருக்கும் சந்தர்ப்பங்கள் தவிர்த்துப் பெறுகை முறையில் தேற்றங்களை: (உ-ம்: டீமோர்கள்) பயன்படுத்தலாகாது.

### பகுதி I

01] அ. பாரம்பரிய எடுப்புச் சதுரத்தைப் பயன்படுத்திப் பின்வரும் வாதங்கள் வலிதானவையா அல்லது வலிதற்றவையா என்பதைத் துணிக. அனுமான வடிவத்தையும் குறிப்பிடுக.

i) எல்லாப் பறவைகளும் பாடக்கூடிய பிராணிகள் ஆகும். ஆகவே எந்தப் பறவையும் பாடக்கூடிய பிராணிகள் அல்ல என்பது பொய்.

ii) சிலதொழிலற்றவர்கள் ஏழைகள் அல்ல என்பது உண்மை எனின் எந்த ஒரு தொழிலற்றவரும் ஏழைகள் என்பதனை உறுதியாகக் கூற முடியாது.

iii) எந்த மாணவனும் திறமைசாலி அல்ல என்பது உண்மையாயின் சில மாணவர்கள் திறமைசாலிகள் அல்ல என்பது பிழையாகும்.

iv) எல்லா விலங்குகளும் பெரும்பாலும் பாசமற்ற பிராணிகள். ஆகவே எந்த விலங்குகளும் பாசமற்ற பிராணிகள் என்பது பொய்.

ஆ. எடுப்பு முரண்பாடு என்றால் என்ன? அதன் ஒவ்வொரு வகைகளையும் விளக்குக?

இ. சமகால நோக்கில் முரண்பாட்டுச் சதுரத்தில் அதீத எடுப்புகள், நிறைகுறை எடுப்புகளின் பிரயோகம் தொடர்பாக எழும் பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக.

02] அ. i) வலிதான எதிர்மாற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் விதிகள் எவை எனக்காட்டி A, E, I ஆகிய எடுப்புகளின் எதிர்மாற்றத்திற்கு உதாரணங்கள் தருக?

ii) O எடுப்பிற்கு ஏன் எதிர்மாற்றம் சாத்தியமில்லை.

ஆ. வழிப்பெறுகை (Education) விதிகளின் மூலம் கீழ்வரும் வாதங்கள் வலிதானவையா அல்லது வலிதற்றவையா என்பதைத் துணிக. வாதம் வலிதற்றதாக இருக்கும் போது ஏற்படும் போலியையும், வலிதானதாக இருக்கும் போது சரியாக உபயோகிக்கக் கூடிய வழிப்பெறுகையின் பெயரையும் கூறுக.

i) எல்லா சிட்டுக்குருவிகளும் அழகியன. ஆகவே அவலட்சணமானவர் எவரும் சிட்டுக் குருவிகளாக அல்லாமல் அல்ல.

iii) எந்த மதுப்பிரியர்களும் அடிமையானவர்கள் அல்ல. எனவே அடிமையற்றவர்கள் சிலர் மதுப்பிரியர்கள் ஆவர்.

iii) சில பகிடிவதைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியன ஆகவே ஏற்றுக்கொள்ள முடியாதன சில பகிடிவதைகள் அல்ல.

iv) எல்லா ஆழிப்பேரலைகளும் ஆபத்தானவை ஆகவே ஆழிப்பேரலை அல்லாதன அனைத்தும் ஆபத்தானவை ஆகும்.

v) சில ஆபரணங்கள் மங்களகரமானவை அல்லாதன அல்ல எனவே ஆபரணமற்றவை சில மங்களகரமானவை ஆகும்.

இ. குறை எடுப்புகளுக்கு ஏன் நேர்மாற்றம் சாத்தியமில்லை.

03] நியாயத் தொடையின் பிரதான விதிகளைப் பயன்படுத்தி பின்வரும் வாதங்களின் வாய்ப்பைப் பரிசோதிக்க.
நியாயத் தொடை வலிதற்றதாயின் அது எவ்விதியை / விதிகளை மீறியுள்ளது எனக் கூறுக?

i) எல்லாப் பறவைகளும் பறப்பனஆகும். கற்பனையாளர்கள் சிலர் பறவைகள் அல்லர். ஆகவே கற்பனையாளர்கள் சிலர் பறப்பவர் ஆவர்.

ii) சில மலர்கள் சிவப்பு அத்துடன் சிவப்பு பொருட்கள் மஞ்சள் அல்ல ஆகவே மலர்கள் மஞ்சள்.

iii) எல்லா நூல்களும் அறிவை தருவன ஆகும் பருத்தி ஒரு நூலாகும் ஆகவே பருத்தி அறிவை தருவது ஆகும்.

iv) எல்லாப் பெறுமதியான பொருட்களும் அரியவை. சில பெறுமதியான பொருட்கள் வைரங்கள். ஆகவே வைரங்கள் அரியவை.

ஆ. நியாயத் தொடையின் பிரதான விதிகளைக் கருத்திற் கொண்டு குறைபேரெடு கூற்றிலிருந்தும், மறை சிற்றெடு கூற்றிலிருந்தும் ஏன் வலிதான முடிவை பெற முடியவில்லை என்பதை விளக்குக?

இ. நியாயத் தொடையின் நான்கு பேருருக்களில் மூன்றாவது உருவை ஒரு உதாரணம் தந்து விளக்குக?

04] அ. கீழ்வரும் வாதங்களை வகுப்புகளின் அடிப்படையில் குறியீட்டில் தந்து, வென்வரை படத்தின் மூலம் அவற்றின் வாய்ப்பைத் துணிக.

i) எல்லா விஞ்ஞானிகளும் புகழ் விரும்பிகள் ஆவர் சில புகழ் விரும்பிகள் தற்பெருமையுடைவர்கள் ஆகவே சில விஞ்ஞானிகள் தற்பெருமை உடையவர்.

ii) அரிஸ்ரோட்டிலும் பிளேட்டோவும் மெய்யியலாளர்களாக இருப்பதனால் மெய்யியலாளர்கள் புத்திசாலிகள் ஆவர்.

iii) உல்லாசப் பயணிகள் மட்டும் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் கடவுச்சீட்டு வைத்திருப்பவர் நாட்டில் பிரவேசிக்க முடியும் எனவே உல்லாசப் பயணிகள் மட்டுமே நாட்டில் பிரவேசிக்க முடியும்.

iv) விஞ்ஞானிகள் ஆயின் ஆயினே விவேகிகள். அமெரிக்கர்கள் ஆயின் விவேகிகள் ஆகவே அமெரிக்கர்கள் விஞ்ஞானிகள் ஆவர்.

ஆ. எல்லா தீவிரவாதிகளும் மோசமானவர்கள் ஆவர் என்பது உண்மை எனின் கீழே காட்டப்படும் அனுமானங்கள் வலிதானவையோ அல்லது வலிதற்றவையோ என கூறுக?

i) தீவிரவாதிகள் உள்ளனர்.

ii) மோசமானவர்கள் உள்ளனர்.

iii) மோசமானவர் அல்லாத தீவிரவாதிகள் உள்ளனர்.

iv) தீவிரவாதிகள் சிலர் மோசமானவர் அல்லர்.

### பகுதி II

05] உண்மை அட்டவணையைப் பயன்படுத்தாது கீழ்வரும் கூற்றுக்களின் வாய்ப்பினை சுருக்கமாக கிட்டிய வழியில் துணிக.

அ. P இனை உண்மை என கொண்டு.

I) $[(P \rightarrow Q) \vee (NR \rightarrow P)]$
II) $[(NP \vee NQ) \wedge (NP \rightarrow NR)]$

ஆ. கீழ்வரும் வாக்கியங்களை சுருக்கத்திட்டத்தின் துணைகொண்டு குறியீட்டிற்கு மாற்றுக?

i) எமது நாட்டை தொடர்ந்து சுனாமி தாக்கும் ஆயின் ஆயினே நாட்டில் பொதுகட்டமைப்பு உருவாக்கப்படும். என்பதோடு ஒன்றில் எமது நாட்டை தொடர்ந்து சுனாமி தாக்காது அல்லது பொதுகட்டமைப்பு உருவாக்கப்படமாட்டாது என்பது உண்மை ஆயின் நாட்டில் யுத்தம் ஏற்படும்.

ii) அவன் வெளிநாடு செல்கின்றான் என்ற நிபந்தனையின் கீழ் அவன் நல்ல வாழ்வை அடைய முடியும். ஆனால் அவன் சோம்பேறியாயின் அவன் ஒன்றில் வெளிநாடு செல்ல மாட்டான் அல்லது செல்வந்தனாகவுமாட்டான்.

இ. தரப்பட்ட சுருக்கத்திட்டத்திற்கு அமைய கீழ்வரும் குறியீட்டு வாக்கியங்களை தமிழில் தருக.

P - அரசியல் நிலை மாற்றமடையும்.
Q - சமாதானம் உருவாகும்
R - மக்கள் சந்தோசமடைவர்
S - நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சியடையும்.

I) $\{[N(P \wedge Q) \rightarrow (R \rightarrow S)] \wedge (NP \vee Q)\}$
II) $\{[R \rightarrow (P \vee Q) \quad N(S \wedge Q)$

06] பின்வரும் வாக்கியங்களை குறியீட்டில் அமைத்து எடுகூற்றில் இருந்து முடிவைப் பெறுவதன் மூலம் அவை வலிதானவையா எனக் காட்டுக?

i). நுகர்வோன் பயன் தெரிந்தவன் அன்றில் அவன் அருமை தெரிந்தவனாயின் நுகர்வோன் மிகையாக நுகர்வான். நுகர்வோன் உலோபி ஆயின் அவன் மிகையாக நுகர்பவன் அல்ல. நுகர்வோன் உலோபி அல்ல அல்லது அவன் நேர்மையானவனாயின் நுகர்வோன் பொருளியல் அறிந்தவன் ஆகவே நுகர்வோன் பயன் தெரிந்தவனாயின் அவன் பொருளியல் அறிந்தவன்.

ii) அவனிற்கு தொழில் கிடைப்பதுடன் விரைவில் திருமணம் செய்து கொள்வானாயின் அவனுக்கு வேலைப்பழு அதிகமாக இருக்கும் அவனிற்கு வேலைப்பழு அதிகமாயின் அவனது கல்வி பாதிக்கப்படும் அவன் விரைவில் திருமணம் புரிவான் ஆனால் அவனது கல்வி பாதிக்கப்படாது. ஆகவே தொழில் கிடைக்க மாட்டாது.

iii) அவன் படித்தவனாயின் அல்லது செல்வந்தனாயின் அவன் அதிஷ்டசாலி. ஒன்றில் அவன் படித்தவன் அல்லது செல்வந்தன் அல்ல என்பது உண்மை என தரப்பட்டால் அவன் அதிஷ்டசாலியே. ஆனால் அவன் அதிஷ்டசாலி அல்ல. ஆகவே அவன் படித்தவன் அல்லது தலைவிதி அவன் வழியல் குறுக்கிடுகிறது.

iv) உற்பத்தி அதிகரிக்குமெனின் பொருளாதாரம் விருத்தியடைவதுடன் வாழ்க்கைத்தரம் உயரும் மக்கள் மகிழ்வோடு வாழ்வதாயின் பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டும். வாழ்க்கைத்தரம் உயரும், உற்பத்தி அதிகரிப்பதும் பொருளாதாரம் விருததி அடைவதும் நடக்காது. ஆனால் அவற்றில் ஒன்று மட்டும் நடக்கும். ஆகவே வாழ்க்கை தரம் உயரும்.

07] பெறுகை முறையில் இருந்து தேற்றம் எவ்வாறு வேறுபடுகிறது விளக்குக?

ஆ. பின்வரும் தேற்றங்களை பெறுகை முறையில் நிறுவுக.

I. $[(P \rightarrow Q) \leftrightarrow N(P \wedge NQ)]$
II. $[(P \rightarrow R) \wedge (Q \rightarrow S)] \rightarrow [(P \wedge Q) \rightarrow (P \wedge R)]$
III. $[N(NP \vee NQ) \rightarrow (NP \leftrightarrow NQ)]$
IV. $[P \vee (Q \wedge R)] \leftrightarrow [(P \vee Q) \wedge (P \vee R)]$

08] கீழ்வரும் வாதங்களைக் குறியீட்டில் அமைத்து அவற்றின் வலிதை அல்லது வலிதின்மையை உண்மை அட்டவணையின் நேரல் முறை மூலம் துணிக.

i) உலகம் எல்லையுள்ளதாயின் ஒரு தொடக்கமும் முடிவுமிருத்தல் வேண்டும். உலகம் எல்லையுள்ளது, ஆனால் உருண்டையானதுமாயின் அது தொடக்கமுடையதோ முடிவுடையதோ அல்ல. உலகம் உருண்டை ஆகவே உலகம் எல்லையுள்ளதோ அல்லது எல்லையற்றதோ அல்ல என்பதாகும்.

ii) ஒன்றில் அவன் கடினமாய் உழைக்கின்றான் என்பதோடு தேர்வில் சித்தியுடைகின்றான் அல்லது அவன் கடினமாய் உழைக்கவில்லை என்பதோடு தேர்வில் சித்தியடைகிறான் ஆகவே அவன் கடினமாய் உழைக்கிறான் ஆயினாயினே தேர்வில் சித்தியடைகிறான்.

iii) காலநிலை சீரற்றதாயின் ஆயினே பயிர்கள் சேதமுறும் என்பதுடன் வருமானம் கிடைக்கப் பெறாது, அல்லது காலநிலை சீரற்றது ஆகவே காலநிலை சீரற்றது ஆயின் வருமானம் கிடைக்கப்பெறாது என்பதுடன் பயிர்கள் சேதமுறும்.

iv) அவன் வீட்டிற்குச் சென்றால் அவனது மனைவி இறப்பாள் அத்துடன் அவன் செல்லாவிட்டால் அவன் இறப்பான் என்பது பொய் ஏனெனில் அவன் வீட்டுக்கு சென்றால் அவன் இறக்க மாட்டான் என்பதுடன் அவன் செல்லாவிட்டால் அவனது மனைவி இறக்கமாட்டாள்.

## பகுதி III

09] அம்பாந்தோட்டையில் உள்ள வேடர்களை சந்தித்து அவர்கள் உண்ணும் வழக்கங்களைப் பற்றி அறிக்கை தயாரிக்க நீர் பணிக்கப்பட்டால் நீர் பின்வருவனவற்றை செய்வீரா. (செய்வீராக இருந்தால் சரி எனவும் இல்லை எனில் பிழை எனவும் கூறுக)

i) அம்பாந்தோட்டைக்குச் செல்ல முன் வேடர்கள் பற்றிய கட்டுரையை வாசிப்பீர்.

ii) அம்பாந்தோட்டைக்குச் சென்ற முதல் நாளில் அவ்வேடர்களின் காலை மதிய மாலை போசனங்களை அவதானித்து ஓர் அறிக்கை எழுதத் திட்டம் தீட்டுவீர்.

iii) உமது ஆய்வில் பயன்பட சில நல்ல சிற்றுண்டிகளை கொண்டு செல்வீர்.

iv) நீர் வேடுவர்களை அழைத்து சில தகவல்களைப் பெறுவீர்.

ஆ) பின்வருவன உண்மையா பொய்யா என கூறுக?

i) சூரியன் நாளை உதிக்கமாட்டான் என்பதற்கு வாய்ப்பே கிடையாது.

ii) X என்ற மாணவன் திறமைசாலி Y என்ற மாணவன் திறமைசாலி ஆகவே எல்லா மாணவர்களும் திறமைசாலிகள் என்பது தொகுத்தறிவு முறையாகும்.

iii) எனது நுண்மதி 80 வீதம் உனது நுண்மதி 70 வீதம் ஆகவே இருவரும் சேர்ந்தால் ஓர் மேதை செய்யும் வேலையை செய்துவிடலாம்.

iv) க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களில் 80% பல்கலைக்கழக அனுமதி கிடைப்பதில்லை. எனவே கபிலன் பல்கலைக்கழகம் செல்லவில்லை.

இ. i) ஆவணச் சான்று என்றால் என்ன
ii) வைத்திய சாட்ச்சி சிறுகுறிப்பு தருக.

10] பின்வருவனவற்றில் ஏதேனும் ஐந்திற்கு சிறுகுறிப்பு வரைக.

i) பகுப்பெடுப்புக்களும், தொகுப்பெடுப்புக்களும்.
ii) ஒழுக்கமும் சட்டமும்
iii) சிந்தனை விதிகள்
iv) ஸ்வார்த்தா அனுமானம்.
v) பிரிப்பும் வகையீடும்
vi) பல்பெறுமான அளவையியல்.

11] கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதிகளில் உள்ள போலிகள் எவை என எடுத்துக்காட்டி ஒவ்வொரு போலியும் நிகழ்ந்துள்ள விதத்தைச் சுருக்கமாக விளக்குக.

1. தொழிலாளர் வர்க்கத்திற்கு கெடுதி செய்யும் முதலாளித்துவம் ஒரு தீமை தரும் பொருளாதார அமைப்பு என்பதை நிலை நாட்டுவதில் உண்மையில் "காள் மார்க்ஸ்;, தவறிழைத்துவிட்டார். ஏன் தனது குடும்பத்துக்குத் தேவையான பணத்தைத் தேடுவதில் கூட அவர் கண்டது துக்கம் நிறைந்த தோல்வியே.

2. உலகத்துக்கு ஒளியாகி திருக்குறளை தந்தவர் திருவள்ளுவர் ஆதலால் அவர் பிறந்த தமிழகத்திற்கே அப்பெருமை சேரும்.

3. சினிமாவினால் இளைஞர்களும் யுவதிகளும் வழி தவறி நடக்கின்றார்கள் என நான் மட்டும் கூறவில்லை. எண்பது சதவீதமான இந்த நாட்டு மக்களும் எனது அபிப்பிராயத்தையே கொண்டுள்ளனர். எனவே நான் கூறிய இக்கூற்றை நிராகரிப்பது நியாயமான தல்ல.

4. உலகப் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் தூஸ்ரா பந்து வீச்சையே பயன் படுத்துகின்றார். எனவே நாமும் தூஸ்ரா பந்து வீச்சையே பயன்படுத்த வேண்டும்.

12. அ. தொகுத்தறிவு முறை, உய்தறிமுறை நியாயங்கள் இரண்டுமே ஒழுக்கவியலில் பயன்படுத்தப்படுகின்றன என்பதற்கு பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக?

ஆ. தூக்கு தண்டனை அளிக்கப்படுவதன் மூலம் கொலைகளின் எண்ணிக்கை குறைவடையும் என்பதற்கு சான்றுகள் உள்ளன. தூக்கு தண்டனை அவசியமானது என ஒழுக்கவியல் ரீதியில் நியாயப்படுத்துவதற்கு இதனை ஒரு ஆதாரமாக கொள்ளலாமா விளக்குக?

பகுதி I, II, III ஆகியவற்றிலிருந்து குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிந்தெடுத்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

### பகுதி I

01] அ. பொப்பரின் பொய்ப்பிக்கல் கோட்பாட்டைக் கொண்டு பின்வருவன ஏன் விஞ்ஞானமல்ல என்பதை விளக்குக.
i) மாக்சியக் கோட்பாடு
ii) உளபகுப்பு கோட்பாடு
iii) கணித விஞ்ஞனம்

ஆ. தூய விஞ்ஞானமும், பிரயோக விஞ்ஞானமும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று உதவுமாற்றைச் சுருக்கமாக விளக்குக.

இ. விஞ்ஞானத்தின் வரலாற்றைப் பற்றிய தோமஸ் கூனின் ஆய்வு விஞ்ஞானத்தின் போக்கைப் பற்றிய புதிய நோக்கிற்கு அவரை இட்டுச் சென்றது இதற்கான முக்கிய பண்புகள் எவை?

02] அ. விஞ்ஞான கோட்பாடுகளை வளர்ப்பதில் காட்டுருக்களின் ஒப்புவமை எவ்வகையில் உதவியுள்ளது.

ஆ. விஞ்ஞானத்தில் கருவிகளின் பங்கினை ஆராய்க.

இ. அவதானத்தைவிட பரிசோதனை என்றும் சிறந்தது எனக் கூறிவிட முடியாது கருத்துக் கூறுக?

ஈ. ஓர் இலட்சியப் பரிசோதனையில் காரணிகள் எவ்விதம் மாற்றிப் பரிசோதித்தல் வேண்டும் என்பதை விளக்கி உதாரணம் தருக.

03] காரணம் தொடர்பான நிர்ணய வாதத்துக்கும் நிர்ணயமில்வாதத்துக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.

ஆ. காள் பொப்பரின் பொய்ப்பித்தல் முறையியலில் உய்தறி உண்மைப் பெறுமான நிலை.

இ. விஞ்ஞான கோட்பாடுகள் என்பன ஊக எண்ணங்களே பொப்பரின் கருத்துப்படி இவ்வூக எண்ணங்கள் எவ்வாறு விஞ்ஞானமாகிறது என்பதைக் கூறி விளக்குக?

ஈ. அளவையியல் விஞ்ஞானமாயினும் காள் பொப்பரின் விஞ்ஞானத்திற்கான எல்லை வரையறை விதியை அதற்கு பிரயோகிக்க முடியாது விளக்குக.

04] அ. புலமையாளரின் பாரம்பரியமும் கைவினைஞரின் பாரம்பரியமும் விஞ்ஞானி கலிலியோவினால் பயனுள்ள வகையில் இணைவு பெற்ற விதத்தைத் தருக?

ஆ. எவ்வாறாயினும் பௌதீகம் போன்ற துறைகளில் உய்தறி முறையும் உயிரியல் போன்ற முறைகளில் தொகுத்தறிவு முறையும் பிரதான முறைகளாகவே விளங்குகின்றன விளக்குக.

இ. விஞ்ஞானக் கருதுகோளுக்குரிய பருவங்களைத் தந்து விளக்குக?

ஈ. கருதுகோள் ஒன்று நேரல் முறை மூலம் எவ்வாறு நிறுவப்படுகின்றது. அதன் முக்கியத்துவம் யாது என்பதையும் எடுத்துக்காட்டுக?

### பகுதி II

05] அ. நிகழ்தகவு தொடர்பான நவீன மீடிறனர் விளக்கங்களைத் தருக?

ஆ. கீழ்வரும் நிகழ்தகவு எண்ணக்கருக்களை உதாரணம் தந்து விளக்குக?

i) கூற்றின் நிகழ்தகவு
ii) மாதிரி வெளி
iii) எளிய நிகழ்ச்சி

இ. ஒரு சீட்டுக்கட்டில் இருந்து ஒன்றன் பின் ஒன்றாக நான்கு தடவைகள் சீட்டுக்கள் எடுக்கப்படு கிறது. எடுக்கப்படும் சீட்டுக்கள் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை எனில்.

i) 4 வித்தியாசமான சீட்டாக இருத்தல்
ii) ஆடித்தன் ராணியாக
iii) அதே சீட்டாக இருப்பதற்கு
iv) யாதேனும் நான்கு சீட்டுக்கள் இருத்தல்

ஈ. செப்பு நாணயமும், ஒரு வெள்ளி நாணயமும் ஒருங்கே சுண்டப்படுகிறது எனின் நிகழ்ச்சிக ளின் நிகழ்தகவைக் காண்க.

i) குறைந்தது ஒரு நாணயம் செப்பாக இருத்தல்
ii) குறைந்தது ஒரு வெள்ளி நாணயம் வருதல்
iii) இரண்டும் வெள்ளி நாணயம் வருதல்.

06] அ. கீழ்வரும் புள்ளிவிபரவியல் முறைகளை விளக்குக.

1) ஆகாரம் 2) இடையம் 3) இடை 4) கடை

ஆ. i) சராசரி விலகல் என்றால் என்ன?

ii) கீழே தரப்பட்ட பரம்பலுக்கான சராசரி விலகலைத் துணிக.
12, 19, 13, 16, 15

iii) சராசரி விலகலைவிட நியம விலகல் சிறந்தது ஏன்? விளக்குக.

இ. புள்ளி விபரம் தொடர்பான தரவுகளைக் கூறி அவற்றின் மூலாதாரங்களைக் குறிப்பிடுக.

ii) துணைநிலை தரவைப் பெற்றுக்கொள்ளும்போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங் களைக் குறிப்பிடுக.

07] கட்டுப்பாட்டுக் குழு முறை என்றால் என்ன? இது சமூக விஞ்ஞானங்களை விட உயிரியல் விஞ்ஞானத்திற்கே அதிக பொருத்தப்பாடுடையது. ஆராய்க.

ஆ. சமூக விஞ்ஞான ஆய்வில் மாதிரி முறைகளின் முக்கியத்துவத்தை விளக்கிச் சிறந்த மாதிரிக்குரிய பண்புகளையும் கூறுக.

இ. நடத்தை விஞ்ஞானத்தில் தனியாள் ஆய்வுமுறை எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.

08] சமூக விஞ்ஞானங்களில் புள்ளிவிபரவியலின் பயன்பாட்டினை ஆராய்க.

ii) உறுதியான தரவுகள் போதியளவு இல்லாமையினால் சமூக விஞ்ஞானங்கள் பாதிப்படைந்துள்ளன. ஆராய்க.

iii) சமூக விஞ்ஞானங்களில் வாய்ப்புப் பார்க்கக்கூடிய எதிர்வுகூறல்கள் அரிதாகவேயுள்ளன. அவற்றின் புறவயத்தன்மையையும், பயனையும் இது கேள்விக்குரியதாக்குகின்றது. ஆராய்க.

### பகுதி - III

09] ஐன்ஸ்ரைன் பௌதீகத்திற்கு ஆற்றிய பங்களிப்பினை, கலிலியோ, நியூட்டன் போன்றோரின் முயற்சிகளினூடாக விளக்குக.

ii) பிரபஞ்ச வெளியில் சூரியக் குடும்பம் பற்றிய கருதுகோள் எவ்வாறு கருத்து மாற்றங்களி னூடாக கலிலியோவின் ஆய்வில் பூரணத்துவமடைந்தன என விளக்குக.

iii) விஞ்ஞான முறை பற்றி ஃபெய்ராபாண்டின் கொள்கை.

iv) C.L.ஸ்ரீவன்சனின் ஒழுக்கவியற்கொள்கை.

10] பின்வருவோரில் இருவர் விஞ்ஞான முறைக்காற்றிய பங்களிப்பினைத் தருக.

i) தோமஸ்கூன்
ii) லக்காதோஸ்
iii) கைகோடீறாகே
iv) சேர் ஐசாக் நியூட்டன்

ஆ. சிக்மண்ட் பிராய்டின் உளவியற் பங்களிப்பைக் கூறி கார்ள் பொப்பர் இக்கோட்பாடு பற்றி முன்வைத்த விமர்சனத்தைத் தருக.

11] சமூக விஞ்ஞானங்களில் நேர்முக முறையினதும், வினாக்கொத்து முறையினதும் பயனை ஆராய்க.

ஆ. பின்வருவோரில் நால்வர் விஞ்ஞானத்திற்கு ஆற்றியுள்ள பங்களிப்பைப் பற்றிக் குறிப்பெழு துக.
1. அலெக்சாண்டர் பிளமிங்
2. எஸ்.சந்திரசேகர்
3. றொபேட் பொய்ஸ்
4. வில்லியம் ஹார்வி
5. லாமார்க்
6. ஜோன் எக்லஸ்